# கமநலம்



கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் பிரசுரம்.

ஆடி 1974

-/50 சதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நெற்சந்தைப்படுத்தும் சபை நெல்லைக் கொள்வனவு செய்கின்றது. முன்பு நெல்லைக் கொள்வனவு செய்யும்போது, நெல்லின் தரத்தைப் பரீட்சிக்கவும், அதில் கலந்துள்ள சப்பை, மண், கல் போன்ற பொருட்களை அப்புறப்படுத்தவும் கமத்தொழில் சேவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அதே நடவடிக்கைகளையே இப்போது நெற் சந்தைப்படுத்தும் சபை செய்து வருகின்றது. நல்ல தரமான நெல், நெல்குற்றும் ஆலைக்கு அனுப்பப்பட்டால்தான் நல்ல தரமான அரிசியைப் பெற முடியும்.

ஈரமான நெல்லைச் சேகரித்து வைத்திருக்க முடியாதென்பதை எல்லாக் கமக்காரர்களும் அறிவீர்கள்.

இப்போது, **12** மாவட்டங்களில் நெல், புசல் அளவுகளில் வாங்கப் படாது, இருத்தல் கணக்கில் நிறுத்து வாங்கப்படுகின்றது. இம்முறை, கமக் காரர்களுக்கு அதிக நன்மையளிக்கின்றது. இதன்படி நாம் நெல்லைக் கொள் வனவு செய்யும்போது, அவற்றுடன் கலந்திருக்கும் கல், மண், போன்ற அகற்ற வேண்டிய பொருட்களுக்கும், நெல்லோடு சேர்ந்திருக்கும் தண்ணீருக்கும் பணம் செலுத்த வேண்டியுள்ளது,

நாங்கள் கொள்வனவு செய்யும் நெல் குறைந்தது இரண்டு மூன்று மாதங்களுக்கு களஞ்சியத்தில் சேகரித்து வைக்கபபட வேண்டியிருப்பதால் அதற்குத்தகுந்த தரமான நெல்லை நாம் வாங்க எத்தனிக்கின்றோம். நெல் லின் பாதுகாப்பிற்காகவும், நல்ல தரமான அரிசியைப் பாவனையாளர்களுக்கு வழங்கவுமே நாம் இந்நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். தயவு செய்து இவ்விடயங்களை உங்கள் கவனத்திற் கொள்ளுமாறு கமக்காரர்களாகிய உங் களைக் கேட்டுக்கொள்கின்றோம்.


**நெற்சந்தைப்படுத்தும் சபை,**
த. பெ. இல: **205,**
**5,** எலிபாங்க் வீதி,
கொழும்பு **5.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OOTRU ORGANISATION OFFICE
12/11/84
JAFFNA

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உழைத்து
நெல் மணியாய் அறுத்தறுத்து குவித்து
நீங்களும் காசுபணம் சேர்த்து வைப்பதால்
எங்கள் நாடுதழைத் தோங்கிடுது உங்களால்

நாட்டு. மக்கள் சோற்றுக்கோப்பை நிறைய
பாடுபட்டு தான் உழைக்கும் விவசாயி
காசை சேர்த்து வைக்க விரும்பும் வங்கி

## தேசிய சேமிப்பு வங்கி

அன்று தானியமாய் சேமித்த மக்கள்
இன்று அச்சமின்றி சேமிக்க எண்ணி
தேர்ந்தெடுத்து இருக்கின்ற வங்கி

## தேசிய சேமிப்பு வங்கி

கூடிய வட்டியும்
கூடிய பாதுகாப்பும் தரும்
தேசிய சேமிப்பு வங்கியின் மூலம் கிராமத்தில் உங்கள்
கொடுக்கல் வாங்கல்களை
மிகச் சுலபமாக நடத்தலாம்.
நாடு முழுதும் பரந்திருக்கும் தபால் நிலையங்களைப் போல
வங்கிக் கிளைகளும் எங்கும் திறக்கப்பட்டுள்ளன.

பூர்ண நம்பிக்கையான பாதுகாப்பிற்கு

## தேசிய சேமிப்பு வங்கி

OOTRU ORGANISATION
MARIAMMAN LANE,
THIRUNELVELY,
JAFFNA,
SRI LANKA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கெம்

## கொண்டு உணவுப்போரை வெல்லுங்கள்

**லங்கெம்மின் பரந்த, உறுதியான பூச்சிக்கொல்லிகள், தெளி கருவிகள், உரவகைகள், கால் நடை நலப் பொருட்கள் ஆகியன உணவுப்போரின் வெற்றிக்கான உங்களது திடமான உத்தரவாதம்.**

**பூச்சிக்கொல்லிகள்**

அஸ்ட்றெக்ஸ்
அசொட்றீன்
டயசினோன் - ஜி
எத்கான்
ஃபொஸ்தியோன்
காபோறு
லன்னேற்
சுப்பர் சுமித்தியோன்
ரொக்ஸ்பீன்

**உரங்கள்**

மக்ஸீகுறோப்
குறே-ஃபோ வகைகள்

**களையான் வகைக்கொல்லி**

கல்தேன்
தூவு கெந்தகம்

**விவசாய தெளிகருவிகள்**

ஹோம் கார்டின்
நாப் சாக்

**புற்கொல்லிகள்**

எம்-50
ஸ்ராம் எப்-34
புற்கொல்லி
சற்றேண்-ஜி
பிறஷ் இலர்
பிளனவின்
காமெக்ஸ்
லொறெக்ஸ்

**மண் புகையூதிகள்**

டீ. டீ.
நெமாகொன்

**பங்கசுக் கொல்லிகள்**

பென்லேட்
மன்சேற்-டி
மைல்ட்றெக்ஸ்
சினெப்

**நாநுவித**

சேபெக்ரன்ற்-என்
ஷெலெஸ்ரோன்-பி
நத்தைக்கொல்லி
நோ-றூற்

**கால்நடை நலப் பொருட்கள்**

சுப்போறு
சியோட்றின்
றுபொண்ட்

# லங்கெம்

விவசாய சுய தேவைப் பூர்த்திக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். —குறள்—

பொழிப்புரை

எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி வறுமையால் சோம்பியிருப்பாரைக் கண்டால், நிலமகள் தன்னுள் சிரிப்பாள்.

---

ஒரே செலவில் தூய்மையும் பிறக்கும் நயம் வர வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா!

---

**நாடு நலம்பெற, நாம் நற்சேவை செய்ய,**
**எமது உற்பத்தி பொருட்களை வாங்கி உபயோகியுங்கள்.**

அதிபர்,

# மில்க்வைற்

## சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசெஞ்சர் வீதி, கொழும்பு—12.

---

மில்க்வைற் சவர்க்கார மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வருகின்றோம். சேகரித்துக் கொடுத்து அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்பண்ணை உரிமையாளர்களே!

கூடியப் பாலைப் பெற இன்றே வாங்குங்கள்

# பி. சீ. சீ.

மோலக் பிளஸ் (விட்டமின் கலவை)

உற்பத்தி — விற்பனையாளர்கள்;—

**பிரிட்டிஷ் சிலோன் மில்லிங் கோ லிமிட்டெட்.**

இலங்கை அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட நிறுவனம்

ஹல்ஸ்டோப் மில்ஸ்,

கொழும்பு —12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமநலம்

கமக்காரர்களின் மத்தியில் தன்னம்பிக்கையை யும், மன உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பூரண பங்கெடுத்து, அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுப்படுத்தி, நிரந்தரமானதொன்றாக்கிக் கொள்ள இச் சஞ்சிகை உதவும்.


மலர் 1

இதழ் 3

ஆடி 1974

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் காலாண்டு வெளியீடு


## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| விவசாய நிலச்சட்டம் ... ... | 1 |
| கமமும் நாமும் ... ... | 4 |
| இளைஞருக்கான திட்டங்கள் ... ... | 15 |
| கண்டி டிறினிட்டி கல்லூரியின் விவசாயப் பண்ணை ... ... | 18 |
| கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பணிகள் ... ... | 21 |
| இலங்கையில் கமத்தொழில் ... ... | 25 |
| கந்தசாமியும் சின்னசாமியும் ... ... | 28 |
| விசாரித்து அறிந்தவை ... ... | 30 |
| ஏர்முனையில் ... ... | 31 |


அட்டைப் படம்

பயிர்ச் செய்கையில் பள்ளிப் பிள்ளைகள் காட்டும் ஆர்வம் அதிகரித்து வருகிறது. ஆசிரியர் மேற்பார்க்கப் பாடசாலைத் தோட்டத்தில் மாணவர்கள் நிலத்தைப் பண்படுத்துவதைப் படத்தில் காணலாம்.

படப்பிடிப்பு: சாந்த வீரசிங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமையான கடன் திட்டம்

ஒரு ரூபா செலுத்திப் பங்குதாரர் ஆவதன் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராக முடியும்.

உறுப்புரிமை பெற்ற அனைவரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், கிராமிய விவசாயத்திற்கும் அபிவிருத்தி வேலைகளுக்கும் முழுமையான கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் பணம் கடனாகப் பெற முடியும்.

முதலில் தாங்கள் கடனாகப் பெற உத்தேசிக்கும் தொகைக்கு ஏற்ப மேற்கொண்டும் பங்குகள் சிலவற்றினை வாங்கவேண்டியிருக்கும். அதாவது, 100 ரூபாப் பங்கை வாங்குபவர்க்கு இத்திட்டத்தின்கீழ் 1000 ரூபா வைத் தவணை அடிப்படையில் கடனாகப் பெற முடியும். நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து, அறுவடை செய்தல் வரைக்குமுள்ள பல்வேறு அலுவல்களுக்காக இக்கடனை அவ்வப்போது கூறுகளாகப் பெறலாம். பங்கு வாங்குவதற்கு ஒரே முறையில் செலுத்துதற்கு உங்களிடம் பணம் இல்லாவிட்டால், உங்களுக்குக் கிடைக்கும் கடனில் இருந்து பங்குக்குரிய பணம் கழிக்கப்படலாம்.

பணம் கடனாகப் பெறுவது சம்பந்தமான மேல் விவரங்களை உங்கள் கிராமிய வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

# மக்கள் வங்கி

**எப்போதும் எல்லோருக்கும் நன்மை புரியும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடப் பொருட் கூட்டுத்தாபனம்

**உற்பத்திப் போரில் முன்னணி வகிக்கும் பெருமக்களே!**
**மக்களின் உற்பத்தி முயற்சிக்குக் கைகொடுத்து உதவுங்கள்.**

## பிரதேச அபிவிருத்திச் சபை

தோட்ட வேலைக்கு, மரவேலைக்கு, கட்டிட வேலைக்கு
உற்பத்தி செய்யும் உபகரணங்களை வாங்குங்கள்.

*அவை தரத்தில் சிறந்தவை*

- **தோட்ட வேலை உபகரணங்கள்**

  மண்வெட்டி, அலவாங்கு, ஸ்கோப்பை, கைமுள்ளு, மிதி முள்ளு, கொத்து முள்ளு, கை ஷவல், குப்பை வாரி, கவ்வாத்துக் கத்தி, காடுவெட்டும் கத்தி, தோட்டக் கத்தி, தேயிலை கவ்வாத்துக் கத்தி, சுரண்டி, கோடரி, மேசைக்கத்தி.

- **மரவேலை, கட்டிட வேலை உபகரணங்கள்**

  மேசன் கரண்டி, சிவுளி (ஒற்றையும், சோடியும்), செதுக்குளி, பிலி செதுக்குளி, தட்டுளி, வெட்டுளி, நான்கு மூலை உளி, துளையிடும் கருவி, ரம்பம், துளைமுனை, ஆணி பிடுங்கும் சுத்தியல், கல் உடைக்கும் சுத்தியல், வாங்கிலில் பூட்டும் குறடு.

**கீழ்க்காணும் களஞ்சியங்களில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.**

1. 541, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை — தொலை பேசி: 33283
2. மாளிகாவை வீதி, இரத்மலானை. — 33517
3. புகையிரத நிலைய வீதி, களனி. — 071—7340
4. வியாங்கொடை வீதி, நித்தம்புவ.
5. மைலகஸ்தன்ன வீதி, பதுளை.
6. கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி.

*தலைமை அலுவலகம்:*

முதலாம் மாடி,
சார்ட்டட் வங்கிக் கட்டிடம்,
ஜனாதிபதி வீதி,
கொழும்பு—1.

தொலை பேசி: 26701/2


OOTRU ORGANISATION
MARI AMMAN LANE,
THIRUNELVELY,
JAFFNA,
SRI LANKA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வெண்ணிற சந்துகுத்தி
* கொப்புள ஈ
* பனிப் புழு
* கபில நிற வெட்டிகள்
* செந்நிற சந்துகுத்தி
* தத்துக் கிளி
* அறக்கெட்டியான்
* தண்டு ஈ

இவைகளால்

உங்கள் நெற் பயிர் தாக்கப்படின்

# பசுடின் 10 மணிகள்

ஓர வீச்சில் அவற்றைக் கொல்லும்

மத்திய தண்டு வாடுதல்
எரிந்துள்ளது போலத் தோற்றமளிப்பது
இலைகள் மஞ்சள் நிறமாவது
இளம் பயிரை நீர் மட்டத்திற்கு அரிக்கும் புழு

முதலியவற்றை கட்டுப்படுத்த

# பசுடின் 10 மணிகள்

சிறு நாற்றங்களுக்கு 8 அவுன்ஸ் பக்கற்றும்
வயல் உபயோகத்திற்கு 5 றுத்தல் பக்சற்றும் பெறுவதற்கு

தயாரிப்பாளர்களும் — விநியோகஸ்தர்களும்—

## ஹரிசன்ஸ் அன் குரொஸ்பீல்ட் லிமிட்டெட்

தபால் பெட்டி 69
ரி. பி. ஜயா மாவத்த,
கொழும்பு — 10.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா

## விவசாய இரசாயனப் பொருட்கள்



மிளகாய் குருமண் நோயை கட்டுப்படுத்த பெனிற்ரோதியோன் 50% உடன் கெந்தகம் 80% (சல்பர்) கலந்து தெளித்தல் வேண்டும்.

மிளகாயை அரிக்கும் புழுவை (பொட்போறர்) கட்டுப்படுத்த தயோடான் 35% அல்லது அசொட்றின் 60 தெளித்தல் வேண்டும்.

கப்டான் 50% பூஞ்சண நோயைக் கட்டுப்படுத்தும்.

லஸ்சோ 4 களைகளை கட்டுப்படுத்தும்.

வேறு விபரங்களுக்கும் இலவச
அறிவுரைச் சேவைக்கும்
தொடர்பு கொள்க.







**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

*113, காலி வீதி, கொழும்பு 3.* தொலைபேசி - 25231


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய நிலச் சட்டம்

**அண்மைக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட பல முக்கியமான சட்டங்களுள் விவசாய நிலச் சட்டமும் ஒன்று. நெற்காணிச் சட்டத்திலிருந்த குறைகளை எல்லாம் இப்புதுச்சட்டம் நீக்குகிறது. மக்கள் ஒத்துழைப்புடன் கிராமங்களில் அபிவிருத்தித்திட்டங்கள் நிறைவேற இச்சட்டம் துணைபுரியும். கிராம நிறுவனங்களுக்கும் விவசாய உற்பத்திவளச் சட்டத்திற்கும் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர் திரு. ஐ. கே. வீரவர்த்தன என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனிப்போம்.**

விவசாயத்தைப் பெருக்கி எமக்குத் தேவையான உணவுப்பொருட்களை இந்த நாட்டிலேயே உற்பத்தி செய்தற்பொருட்டு அரசாங்கம் பல சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. அத்துடன் பல உதவிகளை நல்கியும் வருகிறது. இந்நாட்டு விவசாயத்துறையில் ஒருவித புரட்சியை ஏற்படுத்தக்கூடிய இரண்டு சட்ட மூலங்கள் தேசிய பேரவையின் அங்கீகாரத்தை அண்மையில் பெற்றுள்ளன. ஒன்று: காணிச் சீர்திருத்தச்சட்டம். மற்றது, விவசாய உற்பத்தி வளக்குழுச் சட்டம். தேவைக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து மேலதிகமாகவுள்ள நிலத்தை எடுத்து, நாட்டு நலனுக்காக அந்நிலத்தை மிகச்சிறந்த முறையில் பயன்படுத்த இச்சட்டம் வழிவகுக்கிறது. ஒவ்வொரு பிரதேசத்திலும் விவசாய உற்பத்தித் திட்டங்களை வகுக்கும்போது, அவற்றுக்குப் பொது மக்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் ஆலோசனைகளையும் பெறுவதுடன் அவர்களையும் அவற்றில் பங்குபற்றி உழைத்திடவகைசெய்யும் விதத்தில் விவசாய உற்பத்தி வளக்குழுச் சட்டம் ஆக்கப்பட்டுள்ளது. இந்த இரு சட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கையில், இலங்கையில் உள்ள நெல்வயல்கள் அனைத்துக்கும் பொருந்தக்கூடியதாக 1973 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க கமத்தொழில் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

இத்தகைய ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின்படி இதுவரை கமத்தொழில் என்பது நெற்செய்கையையே குறித்தது. அப்போதிருந்த நிலைமையின்படி நெற்செய்கைக்கே அக்கறை காட்ட வேண்டியிருந்தது. ஆயினும் இப்போது கமத்தொழிலில் நெற்காணிகளை மாத்திரம் கவனித்தால் போதாது. மேட்டு நிலப்பயிர் செய்கைகளும், கால்நடை வளர்ப்பும் நெற்செய்கையைப் போன்றே முக்கியத்துவம் உடையவை. விரிவான அடிப்படையில் அபிவிருத்தியை மேற்கொள்ள இன்றைய நெற்காணிச்சட்டம் இடமளிக்கவில்லை. அதனாலேயே நெற்காணிச் சட்டத்தை நீக்கி, விவசாய நிலம் யாவற்றுக்கும் பொருந்தக்கூடியதாக விவசாய நிலச்சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

முன்னைய பயிர்ச்செய்கைக்குழுவை எடுத்துக்கொண்டால் இதன் காரணம் நன்கு விளங்கும். நெற்காணிகளைச் கவனிக்கக் கூடியவிதத்திலேயே அந்தக் குழுவுக்கு அதிகாரங்கள் தரப்பட்டிருந்தன. ஆனாலும் ஒரு விவசாயிக்கு வயல்நிலத்திற்போலவே மேட்டுநிலத்திலும் தொடர்புண்டு என்பதைக் காணலாம். அதனாலேயே இப்படியான விவசாய நிலச்சட்டம் ஒன்று அவசியப்பட்டது. ஆகவே நாட்டினை முன்னேற்றும் பணிகளில் மக்களையும் ஈடுபடுத்த வகைசெய்யும் விவசாய உற்பத்தி வளக்குழுச் சட்டத்தினதும் முன்னைய நெற்காணிச் சட்டத்தினதும் நோக்கங்களை ஒன்றுக்கு ஒன்று இசைவுபடும்வகையில் வகுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இந்தக் குறிக்கோள் விவசாய நிலச்சட்டத்தின்மூலம் நிறைவுபெற்றது. நெற்காணிச் சட்டத்தில் இருந்த குறைபாடுகளை நீக்கி விவசாய விருத்தியைத் துரிதப்படுத்தக்கூடியதாக இச்சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குத்தகைக் கம உரிமைபற்றிய பிரச்சினை முன்னைய நெற்காணிச்சட்டத்தில் இருந்த ஒரு குறைபாடு. புதிய விவசாய நிலச்சட்டத்தில் விவசாய நீதி அதிகாரம் சேர்க்கப்பட்டுள்ளமையால், குத்தகைக் கம உரிமை போன்ற பிரச்சினைகளுக்குத் துரிதமாகத் தீர்வுகிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

முன்னைய ஏற்பாட்டின்படி, தோன்றும் குத்தகைச் சிக்கல்கள் எதுவும் உத்தியோகத்தர் மட்டத்தில் விசாரிக்கப்பட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பரிசீலனைக் குழுவினால் விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படும். அங்கும் ஒரு முடிவுக்கு வரமுடியாவிட்டால், அந் தப்பிரச்சினை நீதிமன்றத்திற்கு அனுப்பப் படும். இத்தகைய ஏற்பாடு காலத்தைப் போக்கும் நடவடிக்கையாகும். விவசாய நிலச்சட்டத்தின் கீழ்வரும் சட்ட அதிகாரிகளுக்கு மாவட்ட நீதிமன்றத்துக்குள்ள அதிகாரம் இருப்பதனால் குத்தகைக் கம உரிமைப் பிரச்சினைகள் அந்த அதிகாரியினாலேயே தீர்க்கப்படமுடியும். இத்தகைய தீர்ப்பு எதுவும் இறுதியான தாகவே கருதப்படும். அத்தகைய தீர்ப்பு எதற்கும் எதிரான மேன்முறையீடு அல்லது அப்பீல் எதுவும் சட்ட சம்பந்த மானதாக மாத்திரம் இருக்கமுடியும். முறைப்பாட்டுக் காரணங்களையிட்டு அப்பீல் எதுவும் செய்யமுடியாது. இவ்விதத்தில் விவசாயச் சட்ட அதிகாரிக்கு நிறைய அதிகாரம் இருக்கிறது. முன்னர் குத்தகைக் கம உரிமைபற்றி உத்தியோகத் தர்கள் விசாரணை நடத்தும்போது, நிலச் சொந்தக்காரர்கள் அதையிட்டு அக்கறை காட்டாது இருப்பார்கள். இது பெரும் சங்கடமாக இருந்தது. இதனால் காலம் தான் விரயமாகியது. ஆனால் நீதிமன்றத் தைப்போல, குத்தகை வழக்கில் சம்பந்தப் பட்டவர்களுக்குச் சித்தாரிசு அனுப்பி தன்னை வந்து சந்திக்குமாறு அழைப்பதற்கு விவசாயச் சட்ட அதிகாரிக்குப் பலம் இருக்கிறது. நிலச் சொந்தக்காரன் குத்த கைக்காரனை வெளியேற்றினால், அவனுக் குக் கொடுக்கவேண்டிய நட்ட ஈட்டைத் தீர்மானிக்கவும் விவசாயச் சட்ட அதிகா ரிக்கு முடியும்.

குத்தகைக் கமக்காரனின் உரிமையைப் பாதுகாப்பதற்கும் இந்தச் சட்டம் இடமளிக்கிறது. குத்தகைக் கமக்காரன் பற்றிய விபரங்கள் அநேகமாக விவசாயிகள் இடாப்பில் பதியப்படாது இருப்பதே குத்தகைக் கமக்காரனின்மீது அக்கறை காட்டப்படுவதற்கு, முன்னர் ஏற்பட்ட சிக்கலாகும். ஆயினும், விவசாய உற்பத்தி வளச்சட்டத்திற்கு அமைய, வயல் இடாப்புகள் விவசாயிகளுக்கான அடையாள அட்டை சம்பந்தமான தகவற் பத்திரங்கள் ஆகியவற்றில் குத்தகைக் கமக்காரன் பற்றிய தகவல்கள் யாவும் பதியப்பட வேண்டும். இதனால் குத்தகைப் பிணக்குகளில் இத்தகைய பதியப்பட்ட தகவல்கள் பெரும் உதவியாக இருக்கும். விவசாய நிலச் சட்டத்தின்படி நிறுவப்படும் பயிர்ச் செய்கைக் குழுக்களுக்கு வயற் பெயர் இடாப்புகளைத் தயாரித்து வைத்திருக்கும் பொறுப்பு இருக்கும். இவற்றில் குத்தகைக் கமக்காரனைப்பற்றி எப்படியாவது குறிப்பிடவேண்டி இருக்கும்.

கமத்தொழிலுக்கு அவசியமான பல்வேறு சேவைகள் முன்னர் எவ்வித வேறுபாடும் இல்லாதே வழங்கப்பட்டன. ஆயினும், இனிமேல், விவசாய உற்பத்தி வளக்குழுக்களின் மூலமே விவசாயிகளுக்கு வேண்டிய உரம், கிருமி நாசினி மருந்துகள் போன்றவை வழங்கப்படவிருக்கின்றன. இப்படியான விவசாய அனுகூலங்களைப் பெறக் கமக்காரர்களுக்கான அடையாள அட்டை உதவியாக இருக்கிறது. கமக்காரர்கள் தங்கள் குத்தகை உரிமையை நிரூபிக்கவும் இந்த அடையாள அட்டை துணையாக இருக்கும்.

1958 ஆம் ஆண்டிலிருந்து நிறுவப் பட்ட பயிர்ச்செய்கைக் குழுக்களில் பல இப்போது இயக்கமற்ற நிலையில் இருப்பதால், அவற்றைப் புதிதாக நிறுவுவதற்கும் இச் சட்டம் வகைசெய்கிறது. முன்னைய பயிர்ச் செய்கைக் குழுக்கள் நெற்காணி விஷயங்களை மாத்திரம் கவனிக்கும் உரிமையைப் பெற்றிருந்தன. ஆனால் இப்போதைய குழுக்கள் மேட்டு நிலங்கள், கால்நடை வளர்ப்புப் போன்ற பல விஷயங்களையும் கவனிக்கும் உரிமை பெற்றிருக்கும். புதிய விவசாயக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுதற்குப் பதிலாக அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள். முன்னர் விவசாயக் குழுக்கள் சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு ஓரளவு வயதானவர்களே முன் வருவார்கள். இதனாலேயே உறுப்பினர்களை நியமிப்பதற்கும் ஏற்பாடுசெய்யப்பட்டது. வயற்காணி இடாப்பில் வயலில் வேலை செய்பவரின் பெயரைக் குறிக்காது, வயற் சொந்தக்காரரின் பெயரைக் குறித்ததனாலேயே இவ்வாறு ஏற்பட்டது. இளைஞர்கள் இப்படியான கருமங்களுக்கு முன் வந்து பங்குபற்ற வாய்ப்புக்கிடைக்காதமை ஒரு துரதிர்ஷ்டமாகும். இனிமேல் விவசாயத்துறையில் முன்னணியில் நின்று உழைக்கும் வாய்ப்பு இளைஞருக்கும் கிடைக்கும். இதுவரையில் நிறுவப்பட்டுள்ள விவசாய உற்பத்தி வளக்குழுக்கள், விவசாயக் குழுக்கள் போன்றவற்றைக் கவனித்துப் பார்க்கையில், இளைஞர்களுக்குத் தலைமை தாங்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளதைக் காணலாம். இவ்வாறு விவசாயக் குழுக்களுக்குப் புத்துயிர் அளிக்க விவசாய நிலச் சட்டம் வகைசெய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய விவசாயக் குழுக்களுக்குரிய பிரதேசங்களின் எல்லைகள் இப்போதைய சட்டத்தினால் மாற்றப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமச் சபைப் பகுதிக்கும் ஒரு விவசாய உற்பத்தி வளச்குழுவும், கிராமச் சபையின் ஒவ்வொரு தேர்தல் வட்டாரத்திற்கும் ஒரு விவசாயக் குழுவும் நிறுவப்படும். விவசாயக் குழுவுக்கு இரண்டு விதத்தில் அதிகாரம் கிடைக்கும். ஒன்று, விவசாய நிலச்சட்டத்தின்படி ஒரு சட்டரீதியான நிறுவனமாக விவசாயக் குழு விளங்கும். மற்றது, விவசாய உற்பத்தி வளக்குழுவின் ஒரு பிரதிநிதியாக விளங்கும் அதிகாரத்தையும் விவசாயக் குழு பெற்றிருக்கும். கடன்பெறுதல், காணி எடுத்தல், காணி உரிமை சம்பந்தமாக வழக்குத் தொடர்தல் போன்ற அலுவல்களையும் சட்டப்படி நிறுவப்பட்ட விவசாயக் குழுக்கள் கவனிக்க முடியும். விவசாய உற்பத்தி வளக்குழுவின் சார்பில் காணி வரியைத் திரட்டவும், அதனதன் பகுதிகளில் சிறிய வேலைகளைக் கொந்தராத்தாக எடுத்துச் செய்து விவசாயக் குழு பணம் தேடுவதற்கும் இயலும்.

விவசாயக் குழு எத்தனையோவற்றைச் செய்ய வேண்டுமென அரசும் மக்களும் எதிர்பார்க்கின்றனர். அதற்காக எத்தனையோ அதிகாரங்களும் தரப்பட்டுள்ளன. அப்படி இருந்தும், விவசாயக் குழு அதன் கடமைகளைச் செவ்வையாக நிறைவேற்றாதும் இருக்கலாம். அப்படி நடந்தால், விவசாய உற்பத்தி வளக்குழு விவசாயக் குழுவின் அலுவல்களை அதனிடமிருந்து எடுத்து நிறைவேற்ற முடியும், அல்லது விவசாய உற்பத்தி வளக்குழுவின் வேண்டுகோளின்பேரில் அத்தகைய விவசாயக் குழு கலைக்கவும்படலாம். **நெற்காணிச் சட்டத்தின் கீழ் குத்தகைக் கமக்காரனுக்கு இருந்த அதிகாரம், உரிமை எதுவும் எந்த விதத்திலும் குறைவுபடாது விவசாய நிலச் சட்டத்தில் பேணப்பட்டுள்ளன.** இச்சட்டத்தின் கீழ், எந்தப் பிரதேசத்தின் விவசாய அலுவல்கள் சம்பந்தப்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு ஒழுங்குகளைச் செய்தற்கும் அப்பிரதேச மக்களுக்கு இயலும். சிறப்பாக சிறிய நிலச் சொந்தக்காரர்களையும், முன்னேற்றத் திட்டங்களில் பங்குகொண்டு உழைக்கச் செய்தல் இச்சட்டத்தின் நோக்கமாகும். இதன்படி, பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தைத் தீட்டுவதில் விவசாயக் குழுவுக்கும் பெரும்பங்கு இருக்கிறது என்பதைக்காணலாம்.

இந்நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள மிக முக்கியமான சட்டங்களுள் விவசாய நிலச்சட்டமும் ஒன்று. இதுகாலவரை கிராம மட்டத்தில் அதன் முன்னேற்றத்திட்டத்தை வகுத்தல் வழக்கமில்லாதிருந்தது. இதனை மாற்றி, ஒவ்வொரு கிராமமும் அபிவிருத்தித் திட்டத்தை வகுத்து நிறைவேற்ற இச்சட்டம் துணைபுரிகிறது. தனது சொந்த அல்லது குத்தகை நிலத்தை யிட்டு மாத்திரம் சிந்தியாது, முழுக் கிராமத்தின் முன்னேற்றத்தைப் பற்றியும் பரவலாகச் சிந்தித்துச் செயற்படுதற்கு விவசாய நிலச்சட்டம் வழிவகுக்கிறது.

## வீணே கிடக்கும் நிலத்தைக் கட்டாயமாக விளைவித்தல்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு புதிய சட்டப் பிரமாணம் **1974** பெப்ரவரியில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இதன்படி, பயிரிடப்படாத அல்லது செம்மையாகப் பயிரிடப்படாத நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு அல்லது அதில் குடியிருப்பவர்களுக்கு ஒரு பொறுப்பு ஏற்பட்டுள்ளது. அத்தகைய நிலங்கள் அரசாங்க அதிபர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் அனுமதியுடன் அல்லது நெறிப்படுத்தலுடன் விளைவிக்கப்படவேண்டும். அப்படி நடக்கத் தவறுபவர்களிடமிருந்து நிலம் கையேற்கப்பட்டு மற்றைய கமக்காரர்களுக்குக் குத்தகைக்கு அல்லது விளைச்சல் பங்குக்குக் கொடுக்கப்படக்கூடும்.

OOTRU ORGANISATION
MARIAMMAN LANE.
THIRUNELVELY,
JAFFNA.
SRI LANKA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமமும் நாமும்

## கமத்தொழில் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்குமுரிய ஏதுக்களும் இடைஞ்சல்களும்

**உலக நாடுகள் அனைத்திலும் இன்று உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என்பதை நாம் அறிவோம். இத்தட்டுப்பாட்டினுல் எல்லா நாடுகளிலும் அப்பொருட்களின் விலை ஏறிவருகிறது. இன்னும் சிலகாலத்தில் நிலைமை மேலும் மோசமடையலாம். அத்தகைய மோச நிலையிலிருந்து தப்புதற்கு ஒரே ஒரு வழி எங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை நாமே உற்பத்தி செய்துகொள்வதாகும். அதனையும் துரிதமாக நிறைவேற்றியாக வேண்டும். இதற்கு நாட்டு மக்கள் எல்லோரதும் ஒத்துழைப்பு அவசியம். சுருங்கச் சொன்னுல், எங்களுக்குத் தேவையான உணவை இயன்றவரையில் துரிதமாக எங்கள் நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்வது ஒரு தேசிய பொறுப்பாகிவிட்டது.**

இன்று இந்நாட்டில் விளைவிக்கப்படும் எந்தப் பொருளுக்கும் நல்ல விலை கிடைக்கக் கூடியதாகவுள்ளது. அது மட்டுமல்ல, அரசும் எத்தனையோ உதவிகளை வழங்கிவருகிறது. நிலைமை அப்படி இருக்கும்போது, விவசாயிகள் சிலர் விளைச்சலைப் பெருக்கத் துடிப்பதும், மற்றும் சிலர் அவ்வாறு முனையாதிருப்பதற்கும் காரணம் என்ன? அப்படி அக்கறைப்படாதிருப்பதற்கு ஏதாவது இடையூறுகள் இருக்கின்றனவா? இக்கேள்விகளுக்கு விடைகாணும் நோக்குடன் நாங்கள் யாழ்பாணம், அம்பாறை, கேகாலை மாவட்டங்களுக்குச் சென்று ஏறக்குறைய 25 விவசாயிகளைச் சந்தித்து உரையாடினேம். அந்த உரையாடல்களை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரை எழுதப்படுகிறது. அவர்கள் தெரிவித்த கருத்துக்களை அப்படியே இங்கு தர முயற்சித்துள்ளோம்.

விவசாயத்தைப் பற்றிப் பொதுப்படையாகச் சிந்திக்கும்போது எங்களுக்கு ஒரு முக்கிய விடயம் தெளிவாகத் தெரிகிறது. விவசாயத்தில் ஈடுபடும் சிலர் பெரும் உற்சாகத்துடனும் குறிக்கோளுடனும் உழைக்கிருர்கள். தங்களது வயல் நிலத்திலாயினும் சரி, மேட்டுநிலத்திலாயினும் சரி, விளைச்சலைப் பெருக்கி ஆதாயத்தை அதிகமாக்கிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்துடன் பிரயாசைப்படுகிருர்கள். அதைப் போலவே, அவர்கள் ஆலோசனைகளைப் பின்பற்றவும் சம்மதிக்கிருர்கள். அவர்கள் எப்போதுமே விளைச்சலைப் பெருக்கிக்கொள்ளத் துடிக்கிருர்கள். விவசாயத்தில் அத்தகைய தீவிர அக்கறை காட்டாத சிலரும் இருக்கவே செய்கிருர்கள். தங்கள் விவசாயத்திஞல் கிடைக்கும் விளைச்சலைப் பெருக்கவோ, தங்கள் நிலபுலத்திலிருந்து அதிக பயனைப்பெறவோ முனைவதில்லை. செலவைப் பெருக்காது, வருவாயை அதிகரிக்கக் கூடிய வழிவகைகளைப்பற்றி ஆலோசனைகள் கூறிஞலும் அவற்றை அனுசரிக்க அவர்கள் நினைப்பதில்லை. எதையாவது செய்ய முடிந்தாலும், அதையிட்டு அவர்கள் அக்கறைப்படுவதில்லை. மேற்சொன்ன இரு பிரிவினரிலும் பார்க்கப் பெரிதும் வேறுபட்ட மற்றெரு பிரிவும் இருக்கிறது. அவர்களோ விவசாயத்தை ஏனே தானே என்ற உதாசீன மனப்பான்மையுடன் செய்பவர்கள். அவர்கள் 'வந்தால் வரட்டும், போனுற் போகட்டும்' என்ற எண்ணத்துடன் விவசாயம் செய்பவர்கள். பழைய முறையே அவர்களுக்குச் சிறந்த முறை. அதனைக்கைவிட இசையமாட்டார்கள். இத்தகைய உதாசீன மனப்பான்மையால், அவர்கள் முன்னேற்றம் எதுவும் இல்லாது செக்குமாடுகளைப் போன்று ஒரே வட்டத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கின்றுர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாணக் குடா நாட்டில் நெற் செய்கையில் வெகு சிலரே ஈடுபடுகிறார்கள். நாங்கள் சந்தித்த அனைவரும் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, புகையிலை போன்றவற்றைப் பயிரிட்டு ஓரளவு இலாபம் பெறுகிறார்கள். இப்பயிர்களுக்கு நல்ல விலை கிடைப்பதால், அவற்றைப் பயிரிடுவதில் எவ்வளவு கஷ்டங்கள் இருந்தபோதிலும் யாழ்ப்பாண விவசாயிகள் மேலும் மேலும் அக்கறையுடன் அத்தகைய பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுவதைக் கண்டோம். அங்கு பொதுவாக விவசாயிகளுக்குள்ள நிலப்பரப்புக் குறைவாக இருந்தபோதிலும் அவற்றில் விளையும் பயிர்களால் கிடைக்கும் இலாபம் போதியதாக இருக்கிறதென்று அநேகமாக எல்லா விவசாயிகளுமே ஒப்புக்கொண்டார்கள். நிலப்பற்றாக் குறை அங்குள்ள விவசாயிகளின் கஷ்டங்களில் மிக முக்கியமான தொன்றாகத் தெரிந்தது. நாங்கள் சந்தித்த எல்லா விவசாயிகளுமே இப்பொழுது தமக்குள்ள நிலத்திலும் பார்க்கக் கூடுதலாகக் கிடைத்தால் இன்னும் தீவிரமாக விவசாயம் செய்யலாமென நினைக்கிறார்கள்.

பல கமக்காரர்கள் குத்தகை நிலத்திலேயே பயிர் செய்கிறார்கள். சொந்த நிலத்தில் பயிர்ச்செய்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். தங்களது சொந்த நிலம் சிறிதாக இருந்தால் குத்தகைக்கு நிலமெடுத்துக் கமம் செய்கிறார்கள். ஆனாலும் மற்ற மாவட்டங்களைப் போல ஆறு, ஏழு ஏக்கர் நிலத்தில் கமம் செய்து கொண்டிருக்கும் கமக்காரரை யாழ்ப்பாணக் குடாநாட்டில் காண்பதரிது. நிலப்பரப்பின்மைதான் அதற்கான காரணம். போதிய நிலமில்லாத கஷ்டம் ஒரு புறமிருக்க, டிறக்ரர், மண்வெட்டி, தண்ணீர் பம்ப் போன்றவற்றையும், பூச்சி கொல்லி மருந்துகள், நல்ல உழவு மாடுகள் ஆகியவற்றைப் பெறவும் அங்கு கஷ்டம் நிலவுகிறது. இவையெல்லாம் நேர காலத்திற்குக் கிடைத்தால் அதிக கஷ்டமில்லாது கமம் செய்து கொண்டிருக்கலாம் என அங்குள்ள கமக்காரர்கள் தெரிவித்தார்கள்.

இப்பிரச்சினைகள் தொடர்பாக **நீர்வேலி, சின்னப்பட்டி வடக்கிலுள்ள திரு. ஏ. சின்னத்துரை** என்பவரைச் சந்தித்து விசாரித்தோம். அவர் தெரிவித்த சில கருத்துக்களைக் கீழே தருகிறோம். 30 வயதுடைய அவருக்குக் கமத்தொழிலில் நல்ல அனுபவம் இருப்பதாகச் சொன்னார். முன்னர் பெற்றோருக்குக் கமவேலையில் உதவி செய்து வந்தாராம். இப்போது 7, 8 வருடங்களாகத் தானே தனது கமத்தைக் கவனித்து வருகிறார். அவரது தோட்டம் ஏறக்குறைய 16 பரப்புகளை அல்லது ஒரு ஏக்கரைக் கொண்டதாக இருக்கும். இதில் அரைவாசி குத்தகை நிலம். அவர் அதிக பிரயாசைப்பட்டுப் பயிரிடுவது, உருளைக்கிழங்கும் மிளகாயும்தான். இவற்றால் கிடைக்கும் ஆதாயம் அவரது குடும்பத்தை நடத்தப் போதியதாக இருக்கிறது. கடந்த 6 வருடங்களுக்கிடையில் அவர் ரூபா 25,000 செலவளித்துப் புதிதாக ஒரு வீட்டைக் கட்டியுள்ளார். கமம் செய்ய மேலும் அவர் இடம் தேடிக்கொள்ள விரும்புகிறார். குத்தகைக்காவது, விலைக்காவது நிலமெடுக்க முனைந்தும் இன்னும் தமக்கு ஒன்றும் கிட்டவில்லையென்றும் சொன்னார். வீட்டில் பொறுப்புகள் இருப்பதால் ஊருக்கு வெளியே போய்க் கமம் செய்யவும் முடியாமல் இருக்கிறதாம்.

தோட்டப்பயிருக்கு அவர் பம்பின் உதவி கொண்டு தண்ணீர் இறைக்கிறார். பம்பிற்கு உதிரிப்பாகங்கள் எடுப்பது கஷ்டமாக இருப்பதாகவும் சொன்னார். இன்னும் கொஞ்சக்காலத்தில் பம்ப் புதிதாக வாங்க முடியாவிட்டால் தமது கமத்தொழில் அப்படியே ஸ்தம்பித்துவிடுமென்றும் அவர் சொன்னார். அதிக விலையைக் கொடுத்தேனும் நல்ல வகையான பம்ப் ஒன்றை வாங்கவும் அவர் தயாராக இருக்கிறார்.

✻ ✻ ✻

**அச்சுவேலி தெற்கில்** வசிக்கும் ஏறக்குறைய 40 வயதுடைய கமக்காரர், **திரு. வி. நடேசு.** அவருக்குச் சொந்தமாக உள்ளது $\frac{1}{4}$ ஏக்கர் தோட்ட நிலம். அத்துடன் மேலும் $\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கெடுத்துத் தோட்டம் செய்கிறார். சாதாரணமாக அவர் பீற்றூட், வெங்காயம், மிளகாய், குரக்கன் ஆகியவற்றையே பயிர் செய்கிறார். இந்தப் பகுதியில் பீற்றூட் நன்றாக விளைகிறது. $\frac{1}{4}$ ஏக்கர் நிலத்திலே $2\frac{1}{2}$ மாதத்தில் இருத்தல் 35 சதப்படி விற்றாலும் 1000/- ரூபா வரையில் ஆதாயம் கிடைக்குமெனவும் சொன்னார். இப்பகுதி மண்ணில் அடுத்தடுத்து இரு போகங்களுக்கு பீற்றூட் பயிரிடமுடியாதிருக்கிறதை அனுபவத்தில் கண்டிருப்பதாகவும் சொன்னார். அதனால் அங்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் ஒவ்வொரு போகத்திற்கும் வெவ்வேறு பயிர்களை நாட்டவேண்டியிருக்கிறதாம்.



**நிலச்சொந்தக்காரர்கள் குத்தகைக்காரர்களிடம் கூலி கூடுதலாகக் கேட்கும்போது சிரமம் ஏற்படுகிறது என்கிறார் திரு. வி. நடேசு.**

முன்னர் வியாபாரம் செய்து கொண்டிருந்துவிட்டு அதில் நஷ்டம் ஏற்பட்டதனால் இப்போது 8 வருடங்களாக தோட்டம் செய்து வருவதாக நடேசு அவர்கள் கூறினார். இப்போது கொஞ்சக் காலமாகக் குத்தகை நிலச் சொந்தக்காரர் கூடுதலான குத்தகைக் கூலி கேட்கிறார்கள். தோட்டச் செய்கையால் கிடைக்கும் வருமானம் வீட்டுச் செலவுக்குத்தான் போதியதாக இருப்பதால் கூடுதலாக குத்தகை கொடுக்கச் சிரமமாக இருக்கிறதாம். நிலச் சொந்தக்காரர் வற்புறுத்துவதனால் குத்தகையைக் கூட்டிக்கொடுக்கவேண்டும் அல்லது வருடமுடிவில் நிலத்தைக் கை விட வேண்டுமாம். நிலத்தைத் திருப்பி ஒப்படைத்தால் சீவியத்திற்கு வழி கிடையாது. அதனால் தண்ணீர் வசதியுள்ள வேறு ஏதாவது பகுதிக்காவது போய்க் கமஞ்செய்யவும் அவர் தயாராக இருக்கிறார். நிலம் பெற எவ்வளவோ பாடுபட்டும் இன்னும் ஒன்றும் கிட்டவில்லை எனவும் சொன்னார்.

⁂ ⁂ ⁂

**நவக்கிரி, புத்தூரில் வசிக்கும் திரு. ரி. சின்னத்துரை,** தண்ணீர் இறைக்கும் பம்புக்குப் புதிதாக உதிரிப் பாகங்கள் தேடுவதற்கும், விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கும், உள்ள கஷ்டங்களைப் பற்றி விவரித்தார். 36 வயதான அவர் முன்னர் பொலிஸ்காரராக வேலை பார்த்தவர். சிங்கள மொழியில் தேர்ச்சி பெறாத காரணத்தால் அந்த உத்தியோகத்தைக் கைவிட்டு, இப்போது மூன்று ஆண்டுகளாகக் கமஞ்செய்கிறார். அன்று தொடக்கம் அவருக்குச் சொந்தமாக உள்ள அரை ஏக்கர் நிலத்திலும், 3-4 ஏக்கர் குத்தகை நிலத்திலும் தோட்டம் செய்து வருகிறார். தோட்டவேலை இல்லாத நேரங்களில் அவரிடம் உள்ள காரை வாடகைக்கு ஓட்டுகிறார். காரினாலும், தோட்டத்தினாலும் ஓரளவு வருமானம் கிடைப்பதாகச் சொன்னார். அதனால் அவர் கமஞ்செய்ய மேலும் நிலம் தேடவில்லை. தண்ணீர்ப்பம்பைப்பற்றிக் கேட்டபோது, தம்மிடமுள்ள பம்பு 14 வருடங்களுக்கு முன்னர் வாங்கியதாகவும், புதிதாக ஒன்று வாங்குவது இக்காலத்தில் பெரிதும் கஷ்டமாக இருப்பதாகவும் சொன்னார். புதுப் பம்ப் கிடைக்கு மட்டும் இருப்பதையாவது திருத்துவதற்கும் உதிரிப் பாகங்கள் கிடைக்கிறதில்லை என்றார். திரு சின்னத்துரை எப்போதுமே வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகியவற்றையே பயிரிடுகிறார். போன போகத்தில் உருளைக்கிழங்கு நடுவதற்கு விதைக் கிழங்கு கிடைக்காததினால், புகையிலை பயிர் செய்ய நேர்ந்ததாகவும் சொன்னார். புகையிலை பயிர் செய்வது மற்றவற்றிலும் பார்க்கச் சுலபமாக இருப்பதுடன், நல்ல நயமும் கிடைப்பதாகத் தெரிவித்தார்.

⁂ ⁂ ⁂

**அச்சுவேலி தெற்கில்** நாங்கள் சந்தித்த மற்றொரு கமக்காரரான **திரு. கே. அருணாசலம்** இப்பிரச்சினைகள்பற்றிச் சற்று வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்தார். ஐம்பத்தைந்து வயதாகியும் உற்சாகத்துடன் அவர் ஒன்றரை ஏக்கர் நிலத்தில் கமஞ்செய்கிறார். இதில் கால் ஏக்கரே அவருக்குச் சொந்தமானது; மிகுதி குத்தகை நிலம். சிலமாதங்களுக்கு முன்னர் அவர் மேலும் ஓர் ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறார். அதில் இப்போது ஒரு குடும்பம் குடியிருப்பதால், இன்னும் தோட்டஞ்செய்யத் தொடங்கவில்லை என்றார். குடியிருப்பவர்களுக்கு ஏதாவது பணம் கொடுத்து வேறு இடத்தைப் பார்த்துக்கொண்டு தனது நிலத்தைக் கமஞ்செய்யவிட்டுத் தருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டிருப்பதாகவும், அவர்கள் சம்மதித்திருப்பதாகவும் ஓரளவு திருப்தியுடன் தெரிவித்தார். கமக்காரர்கள் இப்போது தங்களுக்குக் கமத்தினால் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு தங்கள் அலுவல்களைக் கடன்படாது கவனிக்க முடியும் என்பது அவர் கருத்து. அவருக்கு வயது வந்த பிள்ளைகள் ஐந்து பேர் இருக்கிறார்கள். அவர்களுள் மூத்தவர் ஓர் அப்போதிக்கரி என்று தகப்பனார் பெருமையுடன் கூறினார். அவருக்கு இன்னும் ஒரு நிலம் வேண்டுமானாலும் வாங்க முடியுமாம். ஆனால் தமக்கு இப்போது கிடைக்கும் வருமானம் போதியதாக இருப்பதால், மேலும் நிலம் தேவைப்படாது என்றும் சொன்னார்.



தனக்குள்ள நிலத்தில் விளைச்சலைப் பெருக்க முனையும் ஐம்பத்தைந்து வயதினரான திரு. கே. அருணாசலம்

"அதிக நிலத்தைத் தேடுவது என் நோக்கமல்ல. உள்ள நிலத்தில் விளைச்சலைப் பெருக்கத்தான் பாடுபடுகிறேன்" என்றார் அவர். அக்கறையும் ஆர்வமும் இருப்பதால் இது முடியாத காரியமல்ல என்று சொன்னபோது, அவரது குரலில் தன்னம்பிக்கை தென்பட்டது. விவசாயத் திணைக்களம் தரும் ஆலோசனைகளைப் பின்பற்றி முறைப்படி கமத்தைப்பாடுபட்டுச் செய்தால், ஏக்கரில் கிடைக்கும் விளைச்சலை இரண்டு மடங்காகச் செய்வது கஷ்டமில்லை என்றும் சொன்னார்.

∴ ∴ ∴

தண்ணீர் இறைக்கும் கருவியை நம்பிக் கமஞ்செய்வதையோ மற்றவர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துச் செய்வதையோ விரும்பாத ஒருவரையும் நாங்கள் சந்திக்க நேர்ந்தது. அவரது பெயர் **எஸ். ராஜா;** வயது 60. திரு. ராஜா 40 வருடமாகக் கமஞ்செய்யும் அனுபவம் பெற்றிருக்கிறார். **காங்கேசன்துறையிலுள்ள மயிலிட்டிக்** கிராமத்தில் அவர் வசிக்கிறார். அவர் 35, 40 வருடங்கட்கு முன் மலேயாவில் ஒரு அச்சுக் கந்தோரில் வேலை செய்துவிட்டு ஊரில் உள்ள காணி பூமிகளைக் கவனிக்க, தக்க ஆட்கள் இல்லாததால் இங்கு திரும்பிவந்து கமத்தொழிலில் ஈடுபட்டார். அவருக்குள்ள 5 பிள்ளைகளில் ஒருவர் மகன். அவருடைய ஒரு மகள் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார். அவரது சகோதரிக்குச் சொந்தமான 2 காணித்துண்டுகளில் ஒன்று 3/4 ஏக்கரும், மற்றது 3 ஏக்கரும் கொண்டது. அவற்றிலும் இவரே கமம் செய்கிறார். இதைவிட இவருக்குச் சொந்தமான மற்றொரு 3 ஏக்கர் நிலமும் இருக்கிறது. ஆனால் அதில் போதிய தண்ணீர் வசதி இல்லாமையால் அக்காணியில் கமம் செய்ய முடியாதிருக்கிறார். அதில் ஒரு கிணறு தோண்ட ஏறக்குறைய ரூபா 10,000/- வரையில் செலவாகும் என்கிறார். இவ்வளவு காலமும் கஷ்டம் ஏதுமில்லாது, குத்தகைக்கு நிலம் கிடைத்ததாலேயே அவர் தமது சொந்த நிலத்தில் கமம் செய்ய அக்கறைப்படவில்லையாம். ஆயினும் இப்போது குத்தகைக்கு நிலம் எடுப்பது கஷ்டமாக இருப்பதால் தமது சொந்த நிலத்தில் கிணறு தோண்டிக் கமம் செய்ய முற்பட்டுள்ளார். எப்போதுமே அடுத்தவர் நிலத்தில் கமம் செய்வதிலும் பார்க்க எங்கள் நிலத்தையே விருத்தி செய்து கொள்வது நல்லதல்லவா என்றும் எங்களைக் கேட்டார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மயிலிட்டியைச் சேர்ந்த திரு. எஸ். ராஜா அடுத்தவர் நிலத்தையோ தண்ணீர் மழையையோ நம்பிக் கமஞ்செய்ய விரும்பாதவர்.**

திரு. ராஜா அவர்கள் வெங்காயம், மிளகாய், மரக்கறி வகைகள், வாழை போன்றவற்றைப் பயிரிட்டுள்ளார். தமது விளைபொருட்களின் விலைகள் ஏறி இறங்குவது வழக்கம் என்றும், ஆனாலும் கமத்தொழிலினால் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு உண்டு, உடுத்து, ஓரளவு மிச்சம் பிடிக்க முடிந்துள்ளதாகவும் சொன்னார். தண்ணீர்க் கஷ்டத்தைப்பற்றிப் பேசும்போது, தண்ணீர் இறைக்கும் பம்ப் அடிக்கடி பழுதுபடுவதனால் அதில் தமக்கு அதிகம் நம்பிக்கையில்லை என்று தெரிவித்தார். அவர் தமது கமத்தில் மாட்டைக் கொண்டு இறைக்கும் பாரசீகச் சக்கரச் சூத்திரத்தையே பூட்டியுள்ளார். இதனைக் கொண்டு இறைக்கும் தண்ணீர் தனது கமத்திற்குப் போதியதாக இருக்கும் எனவும் சொன்னார். முன் குறிப்பிட்ட நிலத்திலும் கமம் செய்யத் தொடங்கினால்தான் மேலும் ஓரளவு பணம் சம்பாதித்துக் கஷ்டமில்லாது தமது நாலு பெண் பிள்ளைகளுக்கும் கலியாணம்செய்து வைக்கலாம் என்று சொன்னார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாம் கடைசியாக, 18 வயது வாலிபர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. கமஞ்செய்வதில் மட்டற்ற ஆர்வம் கொண்டிருக்கும் **திரு. என். தேவதாசன்** என்ற அந்த வாலிபர் தமது ஒரே ஆசை எங்காவது நிலம் எடுத்துக் கமஞ்செய்ய வேண்டும் என்பதே என்றார்.

**மயிலிட்டி** என்ற ஊரில் வசிக்கும் அவர் 12 வயதாக இருக்கும்போதே பள்ளிப் படிப்பை நிறுத்திக் கொண்டு தகப்பனாருக்குக் கமத்தில் உதவி செய்யத் தொடங்கினார். அவருக்கு உடன் பிறந்தோர் 9 பேர் இருப்பதாகவும், அவர் மூன்றாவது பிள்ளை எனவும் சொன்னார். தேவதாசன் தகப்பனார் 2 ஏக்கர் குத்தகை நிலத்தில் வெங்காயம், மிளகாய், தக்காளி, மற்றும் மரக்கறி வகைகள் ஆகியவற்றைப் பயிரிட்டுள்ளார். கமத்தொழிலில் கிடைக்கும் வருமானத்தைப் பற்றிய பேச்சு வந்தபோது மிளகாய்ச் செய்கையால்தான் நல்ல வருமானம் கிடைப்பதாக அபிப்பிராயப்பட்டார். அவரது தகப்பனுக்குக் கமத்தினால் கிடைக்கும் வருமானம் வீட்டுச் செலவிற்குப் போதியதாகவும், அதைவிட, ஓரளவு மிச்சம் பிடிக்கக் கூடியதாக இருப்பதாகவும் சொன்னார். அவர்கள் இப்போது குடியிருக்கும் வீடும், அவரது தகப்பனாருக்குக் கிடைத்த வருமானத்தைக் கொண்டுதான் கட்டுவித்தார்களாம்.

தங்களுக்குள்ள கம நிலம் குத்தகை நிலமாக இருப்பதால் அவரது தகப்பனார் சொந்த நிலத்தை எடுக்கப் பாடுபடுகிறாராம். அவ்வாறு கிடைப்பதுதான் பெருங்கஷ்டமாக இருக்கிறதென்றார். தனியாகக் கமம் செய்து நிறையச் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை தனக்கிருப்பதால் நாட்டின் எந்தப் பக்கத்திற்காவது போய்க் கமம் செய்ய வேண்டுமென்றே தான் துடிப்பதாகச் சொன்னார். கமத்தொழிலைவிட வேறு எந்தத் தொழிலிலும் தமக்கு ஆசையில்லையெனத் தெரிவித்த அவர், தகப்பனாரிடம் கொஞ்சம் பணம் பெற்றுக்கொண்டு எங்காவது வெளியிடத்திற்காவது போய் நிலமெடுத்துக் கமம் செய்ய வேண்டுமென்

பது தமது திடசித்தம் என்று கூறினார். அவரது ஆசை நிறைவேற வேண்டுமென்பதே எங்கள் பிரார்த்தனை.

∴ ∴ ∴

**அம்பாறை மாவட்டம்**

அம்பாறை மாவட்டத்தில் நாங்கள் **அக்கரைப்பற்று, திருக்கோவில், தம்பிலுவில, பாணமை** ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகளைச் சந்தித்தோம். அவ்விடங்களிலே வயல்களிலும் மேட்டு நிலங்களிலும் விவசாயம் செய்யும் கமக்காரர்களை நாம் கண்டோம். பெருமளவில் நிலக்கடலை பயிரிடும் விவசாயிகளையும் நாம் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் பலவித தொல்லைகளை எதிர்நோக்குகின்றார்கள். இப்பகுதிகளில் தண்ணீர் பெறுவதற்குத் தகுந்த நீர்ப்பாசன வசதிகள் இல்லாமையே அவ்விவசாயிகளுக்குள்ள பெருங்கஷ்டமாகும்.

இதைப்பற்றி **அக்கரைப்பற்று** 2 ஆம் வட்டாரத்தின் பிரதான வீதியில் வசிக்கும் **ஜனுப் முகமட் அபூபக்கர் சாருதீன்** எங்களுடன் பேசினார். அவரது வயது 35. மேட்டு நிலங்கள் 2 ஏக்கரிலும் வயல் நிலம் 3 ஏக்கரிலும் கடந்த 15 வருட காலமாக அவர் கமம்செய்து வருகிறார். அவர் கமத்தைவிட வேறு தொழிலே பார்த்ததில்லை. அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது, "இந்தப் பகுதியில் சிறு சிறு குளங்கள் எத்தனையோ உள்ளன. பண்ணலகமவெவ, அப்பலன் ஓயா, சாகமவெவ, பண்ணில ஓயா, ஆகியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இக்குளங்கள் எல்லாமே பாழடைந்து கிடக்கின்றன. அவற்றில் இருந்து தண்ணீர் பாய்ச்சக் கூடிய வாய்க்கால்கள் இல்லை. இக்காரணத்தால் எங்கள் வயல்களில் 2 போகமும் நெல் விளைவிக்க முடியாதிருக்கிறோம். இக்குளங்களைப் புதுப்பித்து, அபிவிருத்தி செய்தால் எங்கள் பகுதியில் தண்ணீர்ப் பிரச்சினையே இருக்காது. எங்கள் வயல்களில் இப்போதிலும் பார்க்க அதிகவிளைச்சலைப் பெறமுடியும்."

∴ ∴ ∴

34 ஆண்டுகளாக விவசாயம் செய்துவரும் **திருக்கோவிலைச்** சேர்ந்த **திரு. நாகமணி** தண்ணீர்த்தட்டுப்பாட்டைப்பற்றி மேலும் விளக்கிக் கூறினார். அவர் 3 ஏக்கரில் நெல்லையும் $3\frac{1}{4}$ ஏக்கரில் நிலக்கடலையையும் பயிர் செய்கிறார். அவருக்கு நீர்ப்பாசன வசதிகள் இல்லாததால் மழையை நம்பியே கமம்செய்கிறார். அக்கம் பக்கங்களில் சிறு சிறு குளங்கள் பல இருந்தும் நீர்ப்பாசன, வாய்க்கால் வசதிகள் இல்லாதபடியால் மழையை நம்பியிருக்க வேண்டியிருக்கிறதாம். சாகம குளத்தினை இன்னும் சற்று உயர்த்தினால் இப்பகுதியில் உள்ள வயல்களில் இரண்டாயிரம் (2000) ஏக்கருக்குத் தண்ணீர் கிடைக்கும் என்று திரு நாகமணி அவர்கள் கருதுகிறார்கள். இப்பகுதியில் 1967 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கஞ்சிக்குடிச்சியாறு என்ற குளத்திற்கு மதகுக் கதவுகள் பூட்டாததால் அதில் நிறையும் நீர் விணுகிப் போவதாயும் சொன்னார். மதகுக் கதவுகள் பூட்டுவதற்கு அவ்வளவு செலவு வராதென்பதே அவர் கருத்து. பெருமளவு செலவு செய்து குளத்தைக் கட்டி மேலும் சிறிது செலவு செய்து மதகுக் கதவுகளை அமைக்காது விடுவதனால் அவ்வளவு தண்ணீரும் வீணுகிப்போகிறதே என்றும், இது எவ்வளவு அநியாயம் என்றும் அவர் வருத்தப்பட்டார். அங்குள்ள வயல் செய்கைக்காரர்கள் தண்ணீர் இல்லாது கஷ்டப்பட, கஞ்சிக்குடிச்சியாற்றின் நீர் வீணுகிப்போய்க்கொண்டிருப்பது எவ்வளவு வேதனைக்குரிய விஷயம் என்றும் சுட்டிக்காட்டினார்.

**தம்பிலுவிலில் வசிக்கும் திரு. ஆர். இளையதம்பி** என்பவர் எங்களுடன் பேசுகையில், அவரது பகுதியில் உள்ள தண்ணீர்த் தட்டுப்பாடு தீர்க்க முடியாத ஒன்றல்ல என்று கூறினார். கமத்தொழிலில் 38 வருட அனுபவம் உள்ள அவர் ஒரு நீர்ப்பாசன விதானையார். அவர் சொல்வதன்படி அப்பகுதியில் மழையை நம்பி விவசாயம் செய்யும் நிலம் சுமார் 12,000 ஏக்கர் உள்ளது. இவற்றுக்கு நீர்ப்பாசனம் கிடையாது என்றாலும், அந்த வசதியைச் செய்ய அதிகம் செலவு ஏற்படாது. இளையதம்பி அவர்களின் வயலுக்கு அண்மையில் ஓர் ஓடை இருக்கிறது. அதனைத் தடுத்து அணைகட்டினால் குறைந்தது 200 ஏக்கர் வயலுக்கு நீர்ப்பாய்ச்சலாம். இதைப்பற்றி ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைக்கு எடுத்துக் கூறியுள்ள போதிலும், இன்னும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம். இப்போது ஒரு போகம் செய்யும் வயல்களுக்கு, தண்ணீர் வசதி மட்டும் இருந்தால், இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகங்களிலும் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்கலாம் என்பது அவர் கருத்து.

அக்கம் பக்கங்களில் உள்ள சிறிய குளங்களைத் திருத்தினால், நீர்ப்பாசன வசதியைச் சுலபமாக ஏற்படுத்தலாம் எனவும், நீர்ப்பாசன விதானையாக இருந்து பெற்ற அனுபவத்தைக்கொண்டே இவ்வாறு சொல்வதாகவும் தெரிவித்தார் அவர்.

⁂ ⁂ ⁂

பாணமைப் பகுதியில் நிலக்கடலை பயிர் செய்யும் கமக்காரர்கள் தங்கள் நிலக்கடலைச் செய்கைக்கு முக்கியமாக நீர்ப்பாசன வசதி இல்லை என்பதைப்பற்றித்தான் பேசினார்கள். ஐந்து ஏக்கர் நிலத்தில் நிலக்கடலையும், மூன்று ஏக்கரில் நெல்லும் பயிர் செய்து கொண்டு **பாணமை வடக்கில் வாழும் திரு. கே. எம். அப்புஹால** இப்பிரச்சினையைப்பற்றிச் சற்று வேறுவிதமாகப் பேசினார். பாணமைப் பகுதியில் வயல் நிலம் 6000 ஏக்கருக்கு மேலாக இருந்தும் இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல் இப்போது பயிரிடப்படுவதில்லை. இதுவும் மழையை நம்பியே விளைவிக்கப்படுகிறது. தண்ணீர் இல்லாததினாலேயே இப்படியான நிலைமை ஏற்பட்டபோதிலும், வில்ஓய போன்ற ஓடையின் தண்ணீர் வீணே கடலுக்குப் போய்ச்சேருகிறது. நீர்ப்பாசன வசதிக்கு ஏதாவது ஏற்பாடு செய்தால், இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிர்செய்யலாம் என அப்புஹால கருதுகிறார். சிங்கள மன்னர் காலத்தில் கட்டப்பட்ட குளங்கள் கூட எத்தனையோ அப்பகுதியில் இருக்கின்றனவாம். மழைகாலங்களில் அக்குளங்கள் நிறைந்து வழிந்தோடிவிடும். ஆயினும் அந்நீரை வயல்களுக்குப் பாய்ச்ச வழிவகைகள் இல்லை. அக்குளங்களுடன் இணைந்திருந்த வாய்க்கால்கள் யாவும் இப்போது தூர்ந்து போய்விட்டன. இவ்வாய்க்கால்களைத் துப்புரவுபடுத்தி நீர்ப்பாய்ச்ச உதவினால், தங்கள் நிலங்களில் விளைச்சலைப் பெருக்க முடியும் என அப்புஹால திடமாக நம்புகிறார்.

தண்ணீர்ப் பற்றுக்குறைப் பிரச்சினையைப் போலவே பெரும்போகத்தின்போது விவசாயிகள் மற்றொரு பிரச்சினையினாலும் பாதிக்கப்படுகிறார்கள். அதுவே தண்ணீர் அதிகரிப்பதனால் ஏற்படும் பிரச்சினை ஆகும். மழைகாலங்களில் சில வயல்களிலே தண்ணீர் நிறைந்துவிட்டால், மாதக்கணக்கில் வற்றுவதில்லை. நல்ல நீர்ப்பாசன வடிகால் திட்டங்கள் இல்லாததமையே இதற்குக்காரணம். இதனால் சில வயல்களில் எவ்வழியிலும் பயிரிடமுடிவதில்லை.

⁂ ⁂ ⁂

**திருக்கோவிலில் வசிக்கும் திரு. கே. வேலுப்பிள்ளைக்கு** இப்பிரச்சினை கடுமையாக இருக்கிறது. அவருக்கு வயது 59 ஆகிறது. ஒன்பது பிள்ளைகளும் அவருக்கு இருக்கின்றனர். வயல் நிலம் 15 ஏக்கரையும் மேட்டு நிலம் 7 ஏக்கரையும் சொந்தமாக உடைய அவர் 35 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறார். 15 ஏக்கர் வயல் நிலம் இருந்தும் அவற்றில் எவ்வித பயிர்ச்செய்கையையும் மேற்கொள்ள முடியாதிருப்பதாகச் சொன்னார். சிறிய மழைக்கும் தமது வயலில் நீர் நிறைந்துவிடுவதாகவும், இந்நிலை 1957 இல் ஏற்பட்ட வெள்ளத்தில் வயல் நிலம் அள்ளுப்பட்டதன் பிறகே இப்படி ஏற்படுவதாகவும் குறிப்பிட்டார். இதைப்பற்றிப் பலமுறை பல நிறுவனங்களுக்கு முறையிட்டும் இன்னும் எவ்வித தீர்வும் கிட்டவில்லை என்றும் கூறினார். இந்த வயல்களைத் திருத்தத் தம்மிடம் பணம் இல்லாததினாலேயே இவ்வளவு காலமும் அந்நிலம் வீணாகக் கிடந்ததெனவும், பயிர்ச்செய்கைக் குழு ஏதாவது உதவி செய்யும் என எதிர்பார்ப்பதாகவும் திரு வேலுப்பிள்ளை நம்பிக்கை தெரிவித்தார்.

⁂ ⁂ ⁂

அம்பாறை மாவட்டத்தில், குறிப்பாக அக்கரைப்பற்றில் விவசாயம் வளர்ச்சி அடையாது இருப்பதற்கு மற்றொரு காரணம் முக்கியமாக இருப்பதைக் கண்டோம். விவசாய நிலத்தைச் சீனி உற்பத்திக் கூட்டுத்தாபனம் எடுத்து விடுமோ என்ற பயம் அங்குள்ள மக்களிடையே நிலவுகிறது. இப்பயத்தின் காரணமாக அக்கரைப்பற்றைச் சேர்ந்த கமக்காரர்கள் தங்கள் விவசாய நிலங்களை விருத்தி செய்ய முயற்சிப்பதில்லை. நிலத்தைச் செம்மைப்படுத்தாததினால் விளைச்சல் சிறப்பாக அமைவதில்லையென **அக்கரைப்பற்று சின்னப்பள்ளி வீதியில் வசிக்கும் ஜனாப் ஏ. எம். இப்ராகிம்** தெரிவித்தார். விவசாயஞ்செய்தே அவர் வாழ்வில் 25 வருடங்கள் உருண்டோடிவிட்டன. அவர் கூறுகிறபடி, நீண்டகாலமாக அப்பகுதியில் எவருக்கும் விவசாயம் செய்ய உத்தரவுப்பத்திரம் வழங்கப்படவில்லையாம். இதற்குக் காரணம், அந்நிலங்களைச் சீனிக் கூட்டுத்தாபனம் எடுக்க இருப்பதுதான் என அப்பகுதி மக்கள் நம்புகிறார்கள். அந்தக் கூட்டுத்தாபனத்துக்குத் தேவையானால், அருகே உள்ள பகுதியில் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் இருப்பதாக இப்ராகிம் சொல்லுகிறார். இப்பகுதியில் நெற்செய்கையே முக்கியமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் தொழில். நெல் விளைவிக்கும் நிலங்களைச் சீனிக் கூட்டுத்தாபனம் எடுத்துக்கொண்டால், இவ்வளவு காலமும் நெற்செய்கையை நம்பி வாழ்ந்த மக்களுக்கு வாழ வழியற்றுப்போய் விடும் என்கிறார். இப்போதே சிலரின் நிலங்கள் எடுக்கப்பட்டுவிட்டதால், எவருமே அக்கறையுடன் விவசாயம் செய்வதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

அண்மையில் **சிறுநீதை** என்ற பகுதியில் நெல் விளைவிக்கப்பட்டிருந்த நிலம் சுமார் 500 ஏக்கர் வரையில் அந்தப் போக இறுதியில் சீனிக் கூட்டுத்தாபனத்தினால் எடுக்கப்பட்டுவிட்டதாக **அக்கறைப்பற்று முதலாம் குறிச்சியில் வசிக்கும் ஜனாப் எம். ஏ. கலந்தன் லெப்பை** சொன்னார். ஐந்து ஏக்கர் நிலத்தையுடைய அவருக்கு விவசாயத்தில் பத்து வருட அனுபவம் இருக்கிறது. எத்தனையோ காலமாகச்செய்கை பண்ணப்பட்டு வந்த நிலம் யாவும் இப்போது சிறிது காலமாகக் கைவிடப்பட்ட நிலையில் கிடந்துவருவதாகச் சொல்லுகிறார். அவ்வளவிற்கு அந்நிலங்களில் காடு மண்டிக் கிடக்கிறது. இன்னும் சில நாட்களில் சீனிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் வந்து இந்த நிலங்களை எடுத்துக்கொள்வார்கள் என்ற பயம் மக்களின் மனதில் நிலவுவதாலேயே இந்நிலங்களுக்கு இந்தக் கதி. இதன் காரணமாக எவரும் கஷ்டப்பட்டு இந்நிலங்களில் உழைப்பதில்லை. இந்நிலங்களை எடுக்கப்போவதில்லை என சீனிக்கூட்டுதாபனம் உறுதியளித்தால், குறுகிய காலத்திற்குள் இந்நிலங்களை மீண்டும் திருத்தி, நல்ல விளைச்சல் ஏற்படச் செய்வது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமல்ல என்கிறார் கலந்தன் லெப்பை. சுற்று வட்டத்தில் வேண்டிய நிலம் இருந்தும் பயிர் செய்யப்பயன்படுத்தப்பட்ட நிலத்தைச் சீனிக்கூட்டுத்தாபனம் எடுக்க முனைவது எதற்காக என்றும் அவர் கேட்டார்.

∴ ∴ ∴

இத்தகைய பெரும் பிரச்சினைகளைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் காணப்படும் பொதுப் பிரச்சினைகளான டிரக்டர் தட்டுப்பாடு, காலவேளைக்கு உரம், பூச்சி கொல்லி மருந்துகள், விதைகள், கடன் கிடைக்காதமை போன்றவை அம்பாறை மாவட்டத்திலும் நிலவுவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. குறிப்பாக, கூட்டுறவுச் சங்கங்களினால் விநியோகிக்கப்படும் பொருள் எதுவும் எங்கும் காலவேளைக்குக் கிடைப்பதில்லை என்றே அநேகர் சொன்னார்கள். திருக்கோவில், தம்பிலுவில், பாணமை ஆகிய பகுதிகளிலேயே டிரக்டருக்கு அதிகத்தட்டுப்பாடு நிலவுவதாக அப்பகுதி மக்கள் பேசியதிலிருந்து அறிந்துகொண்டோம். தங்கள் நிலத்தை உழுவதற்குக் காலவேளைக்கு டிறக்ரர் கிடைக்காவிட்டால் விளைவு பாதிக்கப்படுகிறதெனவும், சில சமயங்களில் விளைச்சலே பாழாகிவிடுகிறதெனவும் ஒரு விவசாயி கவலையுடன் தெரிவித்தார். அப்படிக் கூறியவர் 56 வயதைக் கடந்துள்ள போதிலும் விவசாயத்தைத் தவிர வேறு எத்தொழிலையும் செய்தறியாதவரும் **திருக்கோவிலைச் சேர்ந்தவருமான திரு. கே. நாகமணி** அவர்களே. அவர் கூறியவாறு, சில போகங்களில் மழை பெய்யும்போது, உழுவதற்கு டிரக்டர் கிடையாது; மற்றும் சில சமயங்களில் டிரக்டர் கிடைக்கும்போது மழை கிடைக்காது. இத்தகைய சந்தர்ப்பங்களில் பயிர்ச்செய்கை அநேகமாகப் பாழாகவே போய்விடுகிறது.

∴ ∴ ∴

**ஹொரந்தலிவையில்** வசிக்கும் ஐம்பது வயதான விவசாயி **திரு. எஸ். களுபண்டார**வும் இதே போன்ற கதையைத்தான் சொன்னார். வயலை உழுவதற்கு டிரக்டர் தேடுதல் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து கடன் பெற முனைவதைப்போல கஷ்டமானதென்றே முப்பது வருட விவசாய அனுபவம் பெற்ற அவர் சொன்னார். இதற்குக் காரணம் பாணமைக்கு டிரக்டர் கொண்டு வருவதாயின், அது பொத்துவிலில் இருந்து அல்லது அக்கரைப்பற்றிலிருந்து வர வேண்டியிருப்பதேயாகும். அப்படி 20,30 மைல்களுக்கு அப்பாலிருந்து டிரக்டர் வந்து சேருவதாயின் அதனை நேர காலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு எதிர்பார்க்க முடியாது. பணமும் அதிகமாகச் செலுத்த வேண்டியேற்படும். டிரக்டர் தட்டுப்பாடும் தங்களுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போன்றே பெரியதொரு பிரச்சினை என கஞபண்டார தெரிவித்தார்.

இப்படிப் பிரச்சினைகள் இருக்கும்போது விவசாயத்தை விருத்தி செய்வதும், தொடர்ந்து விவசாயத்தைச் செய்து கொண்டிருப்பதும் அவ்வளவு சுலபமல்ல என்று பலரும் எங்களிடம் தெரிவித்தார்கள். இப்போதுள்ள பொருட்களின் விலைகளுடன் ஒப்பிடுகையில் தரப்படும் கடன் தொகைகள் சற்றும் போதாதென எல்லோருமே சொல்லிக்கொண்டார்கள்.

∴ ∴ ∴

### கேகாலை மாவட்டம்

கேகாலை மாவட்டத்தில் நாங்கள் சந்தித்து உரையாடத் தேர்ந்தெடுத்த விவசாயிகள் மாவனெல்லைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். நிலமின்மை தான் இப்பகுதி மக்களுக்குள்ள முதற் பிரச்சினையாக எங்களுக்குத் தோன்றியது. றப்பர், தென்னை போன்றவை சாதாரணமாகப் பயிரிடப்பட்டுள்ள நிலங்களை நீக்கிப் பார்த்தால், தீவிர கமச் செய்கைக்கு உள்ளான நிலங்கள் மிகவும் சொற்பம் என்றுதான் சொல்ல வேண்டும். அதேபோல வயல் நிலங்களில் பாடுபடுவோரின் எண்ணிக்கையும் மிகவும் குறைவு. கால், அரை ஏக்கர் சொந்த வயல் உடையவர்கள், குறைந்த பரப்பு நிலத்தைக் குத்தகைக்கும் எடுத்துச் செய்கிறார்கள். நாங்கள் சந்தித்த விவசாயிகளிற் பலர் அப்படிக் குத்தகை முறையிலோ அல்லது வருடாவருடம் 'வார' முறையிலோ கமஞ்செய்பவர்களே. அவர்கள் எல்லோரும் தங்களுக்கு இன்னும் சற்றுக் கூடுதலான நிலம் கிடைப்பதையே விரும்புகிறார்கள்.

நிலமில்லாப் பிரச்சினையை அடுத்து மாவனெல்லைக் கமக்காரர்களுக்குள்ள பிரச்சினை தண்ணீர்த்தட்டுப்பாடே. நீர்ப்பாசன வசதி அங்கு இல்லாதமையால் அங்கு நடப்பது நூற்றுக்குநூறும் மழையை நம்பிய விவசாயம் தான். பலருக்குச் சிறுபோகத்தின்போது விவசாயம் செய்ய முடிவதில்லை.



எங்கு நிலம் கிடைத்தாலும் அங்கு போய்க் கமஞ் செய்யத் தயார் என்கிறார் திரு. ஆர். ஏ. டி. குணசேகர.

**மாவனெல்லையில் உள்ள பள்ளே பமுனுவேயில் வசிக்கும் திரு. ஆர். ஏ. டி. குணசேகர** எங்களுக்குக் கூறியவற்றிலிருந்து நிலமின்மையும் தண்ணீர்த் தட்டுப்பாடும் அப்பகுதி மக்களை எவ்வளவிற்குப் பாதிக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். இருபத்துநாலு வயதான அவர் மூன்றேமுக்கால் ஏக்கர் நிலத்தில் 'வார' முறையிலும் 3/4 ஏக்கரில் குத்தகைக்கும் விவசாயம் செய்கிறார். கமஞ்செய்ய இன்னும் நிலம் தேடிக் கொள்ளவே அவர் விரும்புகிறார். ஊரிலிருந்து தூரத்தில் நிலம் கிடைத்தாலும் அங்கு போய்க் கமஞ்செய்யவும் அவர் தயாராக இருக்கிறார். அவருக்கு உதவ இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள். முடிந்தால் கூட்டுறவுப் பண்ணையிலும் சேர்ந்து உழைக்க அவர் விருப்பம் தெரிவித்தார். அவரவு பகுதியில் நீர்ப்பாசன வசதி இடையாது. அதனால் மழையிலேயே அவர்கள் விவசாயமும் தங்கியுள்ளது. இதன் காரணமாக நல்ல விளைவைப் பெறுவதும் கஷ்டமாகிறது.

சிலசமயங்களில் எருமை மாடுகள் கிடைக்காது போவதனால், வயல்களைச் சரியான சமயங்களில் உழுவதும் கஷ்டமாகிவிடுகிறது. அதே போன்று சங்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளிலிருந்து உரம், பூச்சிகொல்லி மருந்து வகைகள் போன்றவை நேர காலத்திற்குக் கிடைப்பதில்லை.

**மாவனெல்லையில் மாலியத்த** என்ற ஓர் ஊர் உள்ளது. அங்குள்ள அலிபிட்டி வீதியில் வசிக்கும் **திரு. டபிள்யூ. எம். செனவிரத்ன** என்பவரும் எங்களைச் சந்தித்துப் பேசினார். அவருக்கு வயது 28 ஆகிறது. சொந்தமாக உள்ள மேட்டு நிலம் ஓர் ஏக்கரை 'வார' முறையிலும் வயல் நிலம் ½ ஏக்கரைக் குத்தகைக்கும் எடுத்து அவர் கமஞ்செய்கிறார். அவர் கமஞ்செய்யும் நிலப்பரப்புக் குறைவாக இருப்பதால் அதில் கிடைக்கும் வருமானம் செலவிற்கும் போதியதாக இல்லை எனச் சொல்லுகிறார். முன்னைய வழக்கப்படியே குத்தகைக் கூலியாக விளைச்சலில் பாதியைக் கொடுக்கிறாராம். இதனால் வீட்டில் சாப்பாட்டுக்குக் கிடைப்பதே போதாதிருக்கிறதாம். உதவிப் பணம் ஏதாவது கிடைத்தால் மேட்டு நிலத்தில் ஏதாவது புதுப் பயிர்களை நாட்டலாம் எனவும் அவர் யோசிக்கிறார். எங்காவது ஓர் ஏக்கர் நிலமேனும் ஊருக்கு வெளியே கிடைத்தாலும் அதை எடுத்துக் கமஞ் செய்ய அவர் தயாராக இருக்கிறார். நிலம் ஏதேனும் சமீபமாகக் கிடைத்தால் குடும்பத்தில் உள்ள மற்றவர்களின் உழைப்பையும் பயன்படுத்திக் கமஞ் செய்யலாம் என்கிறார்.

இப்பிரச்சினைகளுக்கு முற்றிலும் வேறுபட்ட நிலைமை ஒன்றைப்பற்றி **ஹெம்மாத்தகமை, ஓலானை** என்ற இடத்தைச் சேர்ந்த இளம் விவசாயி ஒருவர் எங்களுக்கு எடுத்துக் கூறினார். கடாதெனிவத்தையில் நிறுவப்பட்டுள்ள ஐக்கிய இளம் விவசாயிகள் சங்கத்தின் தலைவராகப் பணிபுரியும் **ஜனாப் எம். பாரூக் ஷரிப்** என்னும் அவர், முன்னர் கொழும்பிலுள்ள ஒரு தனிப்பட்ட கம்பனியில் வேலைசெய்துவிட்டு, 1973 ஆகஸ்ட் மாதத்தில் இந்த விவசாயிகள் சங்கத்தை நிறுவினாராம். எட்டாம் வகுப்பிலும், அதற்கு மேல் வகுப்பிலும் சித்தி பெற்ற இளைஞர்கள் பதினொரு பேர் ஒன்றுசேர்ந்து 50 ஏக்கர் நிலத்தைப் பெற்றுக் கமஞ் செய்யத் தொடங்கினாராம். இப்போது 15 ஏக்கர் நிலத்தில் மரவள்ளி, சோளம், மரக்கறி வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. மேலும் ஏறக்குறைய 11 ஏக்கர் நிலத்தில் வாழை நடப்பட்டுள்ளதாகவும் பாரூக் அவர்கள் தெரிவித்தார். மிகுதியாக உள்ள நிலத்தில் தேயிலையும் றப்பரும் நாட்ட எண்ணியுள்ளார்களாம். இளம் விவசாயிகள் ஆளுக்கு 500 ரூபா வீதம் சேர்த்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். எனினும் வருமானம் எதுவும் கிடைக்கவில்லை. இதன் காரணமாகச் சில உறுப்பினர்களின் ஆர்வம் சற்றுக் குறைந்துள்ளது. இப்பண்ணையில் விவசாயத்தை நன்னிலைக்கு விருத்தி செய்வதானால் மேலும் பணம் முதலீடு செய்ய வேண்டும். இப்பணத்தை பெமினிவத்தையில் உள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து கடனாகப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்துள்ள போதிலும், இன்னும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை எனவும் பாரூக் அவர்கள் கூறினார். ஆயினும் இப்பண்ணையில் தொடர்ந்து விவசாயம் நடத்த எண்ணியிருப்பதால் எப்படியாவது பணம் தேடவேண்டும் எனவும் அவர் இறுதியில் தெரிவித்தார்.

திட சித்தத்துடனும் ஆர்வத்துடனும் உழைக்கும் இவ்விளம் விவசாயிகளுக்கு பெரும் இடைஞ்சலாக இருப்பது பணமுடை என்பதைக் கண்டோம். இச்சங்கம் அரசாங்கத்திடமிருந்து உதவிபெற்று நிறுவப்படாதமையால், பண உதவி பெறுவது ஓரளவு கஷ்டமாகவுள்ளது. வளர்ச்சி இருந்த போதிலும், பணக்கஷ்டத்தினால் அவர்களது விவசாய முயற்சிகள் பாதிக்கப்படுகிறது என்பதைக் காண முடிந்தது.

நாங்கள் சந்தித்த விவசாயிகள் கூறியவற்றில் பல முக்கிய விடயங்களை அறிய முடிந்தது. விவசாயத்தைப்பற்றி அவர்கள் யாவரும் மிக்க பற்றுதலுடனேயே பேசினார்கள். அதேபோல, கமத்தொழிலை மதிப்பு வாய்ந்த, சுதந்திரமான தொழிலாக அவர்கள் கருதுகிறார்கள் எனவும் எங்களுக்குத் தோன்றியது. எத்துணைக் கஷ்டங்கள் இருந்தபோதிலும் உழவுத் தொழிலைவிட வேறு எத்தொழிலும் பார்க்க எத்தனித்ததில்லை எனச் சிலர் பெருமையுடன் கூறிக் கொண்டதையும் கண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட ரீதியில் கவனித்தால், நில விஸ்திரணம் குறைவாக இருந்தபோதிலும் அதிக வருமானத்தைக் கமத்தின் மூலம் பெறுபவர்கள் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் என்பதைக் கண்டோம். முன்னர் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற பொருட்களுக்கு அரசு உத்தரவாத விலைகளை நிர்ணயித்துள்ளபோதிலும், சந்தையில் அவற்றுக்கு மிகக் கூடுதலான விலை கிடைப்பதும் இதற்கு ஒரு காரணம். யாழ்ப்பாணத்தில் நாங்கள் சந்தித்த விவசாயிகள் அத்தனைபேரும் விவசாயத்தில் பெரும் ஈடுபாடுகொண்டவர்கள். அவர்களில் ஒருவர்கூட வேறு எத்தொழிலுக்கும் நாட்டம் காட்டவில்லை. இவற்றிலிருந்து யாழ்ப்பாணத்து விவசாயிகளுக்கு எத்தனை கஷ்டங்கள் இருந்தபோதிலும், அவற்றினை ஒதுக்கித்தள்ளி முன்னேறும் ஆர்வம் அவர்களிடமிருப்பது தெளிவாகப் புலப்பட்டது.

அம்பாறை மாவட்ட விவசாயிகள் குறிப்பிட்ட பிரச்சினைகள் மற்ற மாவட்ட மக்களுக்குள்ள பிரச்சினைகளிலும் முற்றிலும் வேறுபட்டவை. நிலமில்லாப் பிரச்சினை அவர்களுக் கில்லை. தண்ணீர்த்தட்டுப்பாட்டுக்குப் பதிலாக அவர்களுக்குள்ள பிரச்சினை தண்ணீர் பாய்ச்ச வழிவகையற்ற பிரச்சினை. உண்மையில் அம்பாறை மாவட்டத்தின் ஒரு பகுதி தண்ணீர் அதிகரிப்பினால் சிரமப்படுவதாக அறிந்தோம். சீனிக்கூட்டுத்தாபனம் நிலத்தை எடுக்கப்போகிறது என்ற பீதி அக்கரைப்பற்று மக்களைப் பிடித்திருப்பதையும் அவதானித்தோம். இப்படியான கஷ்டங்கள் சில இருந்தபோதிலும் நாங்கள் சந்தித்த அனைவரும் அதிக கஷ்டம் எதுவும் இல்லாது சீவிக்கக்கூடியவாறு வருமானம் பெறுவதாகவும் எங்களிடம் கூறினார்கள்.

ஆனால் கேகாலை மாவட்டத்தில் நிலவும் நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக எங்களுக்குத் தோன்றியது. முக்கிய பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில், யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் இதற்கும் இடையில் ஒரு பொதுத்தன்மை இருக்கவே செய்கிறது. கேகாலை மாவட்டத்தில் நிலவும் நிலமின்மை, தண்ணீர்த் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடுமையான பிரச்சினைகளாக இருப்பதைக் கண்டோம். ஆயினும் யாழ்ப்பாணத்து விவசாய மக்களிடையே காணப்படும் தன்னம்பிக்கையும், தீவிரமும், விடாமுயற்சியும் கேகாலை விவசாய மக்களிடை காணக்கூடியதாக இல்லை. மிளகாய், வெங்காயம் உருளைக்கிழங்கு போன்ற துரித பலன் தரும் பயிர்களைக் கேகாலையில் நன்றாகப் பயிர் செய்ய முடியாதிருத்தல் இத்தகைய நிலைமைக்குக் காரணமாக இருக்க முடியும். எப்படியேனும் மற்றவர்களை நம்பி வாழாதிருக்க எதையேனும் பயிரிட வேண்டும் என்ற அவா கேகாலை மாவட்டத்து மக்கள் எல்லாரிடமும் நிலவுகிறது.

இந்த மூன்று மாவட்டங்களையும் சார்ந்த விவசாயிகளிடம் காண முடிந்தவொரு பொது அம்சத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். கமத்தொழில் பற்றிய ஆலோசனைகளைக் கேட்டு அவற்றின்படி நடக்க அவர்கள் விருப்பம் கொண்டிருப்பது அந்தப் பொதுஅம்சமாகும். அவர்களது விளைச்சலைப் பெருக்கக் கூடிய ஆலோசனைகளைப் பின்பற்றும் ஆர்வம் எங்களைச் சந்தித்த எல்லா விவசாயிகளிடமும் இருப்பதைக் கவனித்தோம். ஆயினும் அவர்களுக்கு இப்போதுள்ள கஷ்டங்கள் காரணமாக, தங்களின் விவசாயத்தை இதிலும் பார்க்கச் செம்மையாகச் செய்ய முடியாதிருப்பதாகப் பலர் எங்களிடம் தெரிவித்தனர். அவர்கள் தெரிவித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டால், இப்போதிலும் பார்க்க முன்னேற்றம் காண்பதற்குக் காலஞ் செல்லாது எனப் பலரும் குறிப்பிட்டார்கள். விவசாயஞ்செய்து நல்வாழ்வு பெற முடியும் என்ற நம்பிக்கை இருப்பதனலேயே பலரும், மேலும் அதிக நிலம் விவசாயத்துக்குக் கிடைத்தால் நன்றாக இருக்கும் எனக்குறிப்பிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞருக்கான திட்டங்கள்

— டி. த. எஸ். ரத்னவீர —

**இந்நாட்டில் இளைஞருக்கான திட்டங்கள் எத்துணை முக்கியத்துவம் பெறுகின்றது என்பதையும், அவற்றின்மூலம் என்னவெல்லாம் சாதிக்கப் படவிருக்கிறது என்பதையும் விளக்கிக்காட்டுகின்றார் கட்டுரை ஆசிரியர். இவர் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் ஆராய்ச்சி பயிற்சி உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது.**

வேலை வாய்ப்புக்களைப் பெருக்க, விவசாயத்தை விருத்தி செய்ய, உணவு உற்பத்தியை ஊக்கப்படுத்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவற்றுள் இளைஞருக்கான செய்திட்டங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. காணி ஆணையாளர் திணைக்களத்தினாலும் மாவட்டங்களில் உள்ள அரசாங்க அதிபர்களினாலும் இப்படியான செய்திட்டங்கள் நிருவகிக்கப்படுகின்றன. வேலை இல்லாதும், காணி இல்லாதும் இருக்கும் இளைஞர் மீதே அதிக அக்கறை காட்டப்படுகிறது. இத்தகைய இளைஞர்களுள் பலர் படித்தவர்கள். அவர்களுக்கு நிலையான வருவாயையும் முறையான வாழ்க்கைத் தரத்தையும் தேடிக் கொள்ள வழிசெய்வதே இத்திட்டங்களின் நோக்கம். அவர்கள் தமக்கென வீடு வாசலைக் கட்டி மனைவிமக்களோடு நிம்மதியாக வாழ்வதற்குத் தேவையான காணியும், பண உதவியும் இத்திட்டங்களின்கீழ் அவர்களுக்குக் கிடைக்கும்.

இந்தச் செய்திட்டங்களை ஆரம்பித்த காலங்களில் சொந்தப்பணம் இல்லாத வறிய, ஆனால், படித்த இளைஞர்களைக் கமத்தொழிலில் ஈடுபடுத்துவது இப்போதிலும் பார்க்க அதிக கஷ்டமாக இருந்தது. கமஞ்செய்யக் காட்டு நிலத்தைக் கொடுத்துப் பயிர்செய்யுங்கள், குடியேறுங்கள் என்று சொன்ன மாத்திரத்தில் விவசாய விருத்தியோ குடியேற்றமோ ஏற்பட்டு விடுவதில்லை. தங்கள் பெற்றார், உற்றார் பிறந்து வளர்ந்த சூழல் எல்லாவற்றையும் விட்டு, புதியதொரு சூழ்நிலையில் பரிச்சயமில்லாத கமத்தொழிலைச் செய்வதில் ஈடுபடும் இந்த இளைஞர்களுக்கு அரசு பல வழிகளில் உதவி தருகிறது. காட்டை வெட்டித் துப்புரவாக்குவதற்கும் நிலத்தைப் பண்படுத்தும் வேலைகளுக்கும் அரசின் உதவி கிடைக்கிறது. இளைஞர் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் இவைதான்:

- படித்த வாலிபர்கள் கமத்தொழிலின் மூலம் பொருள்வளத்தைப் பெருக்கல்;
- வீணே கிடந்த நிலத்தை விருத்தி செய்து விளைவித்துத் தேசிய உற்பத்தியை உயர்த்துதல்;
- வேலையற்ற, நிலமற்ற இளைஞர் குழாத்தினை பொருளாதார வளர்ச்சியைப் பலப்படுத்தும் தலைமுறையினராக்குதல்;
- பிறநாடுகளிலிருந்து நாம் பெற்ற உணவுப் பொருட்களுக்குப் பதிலாக அவற்றையும் அவைபோன்ற வேறு உணவுப்பொருட்களையும் உற்பத்தி செய்தற்கான வழிவகைகளை வகுத்தல்.

இளைஞர் செய்திட்டங்கள் சமூக அபிவிருத்தித் திட்டங்களாக இருப்பதனாலும் அவற்றில் ஈடுபடுபவர்களுக்குச் சிறப்பான அல்லது நீண்டகால அனுபவமோ இல்லாததனாலும், விருத்தி செய்யப்படும் பகுதி முதன் முதலாகப் பயிரிடப்பட இருப்பதனாலும், அவற்றைத் திட்டம் வகுத்து நிறைவேற்ற வேண்டியுள்ளது. அரசு பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு நூற்றுக்கணக்கான இளைஞர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளும் செய்திட்டங்கள் என்பதால் இவற்றுக்காக வகுக்கப்படும் திட்டங்களது பொருளாதார, தொழில்நுட்ப, சமூக அம்சங்கள் அபிவிருத்தித் தன்மை கொண்டவையாக இருக்க வேண்டியுள்ளது. இச்செய்திட்டத்தினுள் விளைவிக்கக்கூடிய - விளைவிக்க வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர் வகைகளை இத்திட்டத்தின்படியும் உறுப்பினர்களது சம்மதத்தின்படியும் அவ்வப்பகுதிக்கும் சுவாத்தியத்துக்கும் ஏற்றவாறு தேர்ந்தெடுப்பார்கள்.

இவ்வாறு இளைஞர்கள் நூற்றுக்கணக்கானோர் ஒன்று சேர்ந்து காட்டை அழித்துப் புது நிலத்தில் புதிய பயிர்களை விளைவிக்கும்போது கஷ்டங்கள், சிரமங்கள் பல தோன்றத்தான் செய்யும். அவற்றை எதிர்நோக்கி வெற்றி கொள்ளுதல் அவசியமாகிறது. இவற்றுக் கெல்லாம் ஏதாவது தாபன, நிருவாக அமைப்புத் தேவை. இப்படியான நிருவாகமும் அபிவிருத்தி அலுவலும் சாதாரணமாக அரசாங்கத் திணைக்களங்களில் நடைபெறும் அலுவல்களிலிருந்து வேறுபட்டவை. அதனால் இத்தகைய பணிக்குத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

ஆரம்பத்தில் இத்தகைய ஊழியர்கள் வழிகாட்டி உதவினால் போதும். ஏனெனில், இப்படியான செய்திட்டங்கள் பல பெருமளவு பணச்செலவில் அரசாங்கத்தினால் நிறுவப்பட்டுள்ளன. எதிர்காலத்திலும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இவை எல்லாவற்றையும் அரசாங்க அதிகாரிகளே எப்போதும் நடத்த முடியாது. அப்படிச் செய்தால் செலவும் அதிகமாகும். தவிர, பொது மக்களின் நன்மைக்காக ஆரம்பிக்கப்படும் இப்படியான செய்திட்டங்கள் திறம்பட நடப்பதற்குப் பொதுமக்களையும் அவற்றில் ஈடுபடுத்திப் பங்குகொள்ளச் செய்தல் அவர்களுக்குப் பிடித்தமான விஷயமாகும். திட்டங்கள் வெற்றியடைவதற்கும் இது துணையாக இருக்கும்.

இதனாலேயே இளைஞருக்காக ஆரம்பிக்கப்படும் செய்திட்டங்களை நடத்தும் பொறுப்பு இறுதியில் இளைஞரின் கைகளிலேயே ஒப்படைத்தல் குறிக்கோளாகின்றது.

**செய்திட்டங்களின் விபரம்**

காணி ஆணையாளர் திணைக்களத்தின் கீழ் இப்போது இலங்கையில் வாலிபருக்கான செய்திட்டங்கள் **44** இயங்கிவருகின்றன. இவற்றுக்காக பன்னீராயிரம் ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் யாவும் **1965** ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. முதல் வருடத்தில் மூன்று திட்டங்களும், அடுத்த வருடத்தில் **21** திட்டங்களும், **1967** இல் ஒன்பது திட்டங்களும், எஞ்சிய திட்டங்கள் **1973** ஆம் ஆண்டிலும் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டங்களிலே **3900** வேலையற்ற வாலிபர்களுக்குக் கமஞ்செய்தற்காக நிலமும் பண உதவியும் வழங்கப்பட்டன. **1973,** ஜூலை மாதம் வரையுள்ள புள்ளிவிவரங்களின்படி, இளைஞருக்கான திட்டங்களில் அரசு ஒரு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்துப் பதினையாயிரம் ரூபாவைச் செலவிட்டுள்ளது. இப்போது இளைஞர் செய்திட்டங்களில் உள்ள உறுப்பினர் **3900** பேர் எனவும், அவர்கள் ஆளுக்கு இரண்டு ஏக்கர் வீதம் அபிவிருத்தி செய்திருப்பார்கள் எனவும் கொண்டால், இது வரை **7800** ஏக்கர் நிலம் அபிவிருத்தி அடைந்திருக்கும். இதன்படி ஏக்கருக்குச் சாதாரணமாக **2100 -** ரூபாவீதம் செலவாகியிருக்கும். ஆட்களைக் கணக்கிற் கொண்டு செலவைப் பிரித்துப் பார்த்தால், வாலிபர் ஒருவருக்கு **4300 -** ரூபாவீதம் செலவாகியுள்ளது.

எல்லாத் திட்டங்களையும் சேர்த்துப் பார்க்கையில் இப்படித் தோன்றும் செலவுவிபரங்கள், தனிப்படுத்திப் பார்க்கும்போது வேறு விதமாக அமைந்திருப்பதையும் காணலாம். சில திட்டங்களின் பேரில் பொதுவாக ஏற்பட்ட செலவைக் கூட்டிப்பார்க்கும்போது, ஆளுக்கு **8000/-** ரூபாவீதம் செலவாகியுள்ளது. இளைஞர் செய்திட்டங்களில் பலவிதமான பயிர்கள் விளைவிக்கப்பட்டுள்ளன. மிளகாய், வெங்காயம், பயறு, சோயா, போஞ்சி, ஏலக்காய், நெல், கொடித்தோடை, அன்னாசி போன்றவை இவற்றுட் சில.

நிலம் இருப்பதைப் பொறுத்து இளைஞர் திட்டங்களில் ஆளுக்கு, **3**, **3½**, **4** ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. பயிரிடப்படக்கூடிய காணியின் விஸ்தீரணத்தைப் பொறுத்து சில வாலிபர் திட்டங்களில் **30 – 50** பேர்களும், மற்றும் சிலவற்றில் **300** அல்லது அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையினரும் இருப்பார்கள். இத்திட்டங்கள் பலவற்றின் உறுப்பினர்களுக்குத் தங்கள் சீவியத்துக்குப் போதிய வருமானம் அவற்றிலிருந்து கிடைக்கிறது.

**பண உதவி வழங்கும் ஏற்பாடு**

பெற்றோரைப் பிரிந்து தூரத்தே போய் தனக்கென ஒரு வாழ்க்கை முறையை வகுத்துக்கொள்ள முனையும் வாலிபர் கமஞ்செய்து விளைச்சல் பெறும் வரை, அரசு இவர்களுக்கு வேலைசெய்யும் ஒவ்வொரு நாளுக்கும் **2/-** ரூபாவிதம் உதவி அளிக்கிறது. இப்படி ஒரு வாலிபன் ஆகக்கூடியது **600** நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை இந்த உதவித் தொகையைப் பெறலாம். எனவே இதன்படி அவர் **1200** - ரூபாவரை உதவி பெற முடிகிறது. இதைவிட, ஆயுதங்கள், உடுப்புக்கள் போன்றவற்றை வாங்குவதற்கும், காட்டை அழித்து, நிலத்தைப் பண்படுத்தற்கும், கன்று, விதை, உரம் போன்றவற்றை வாங்குவதற்கும் உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது. வீடு ஒன்றைக் கட்டிக்கொள்ளுவதற்கும் உதவி வழங்கப்படுகிறது. கிடைத்த நிலத்திலிருந்து வருவாய் கிடைக்கும்வரை பண உதவி வழங்குவதும், அத்தியாவசிய பொருட்களுக்கு உதவுவதும் குறிக்கோளாகும்.

இளைஞர்களுக்குக் கொடுக்கப்படும் காணித் துண்டுகள் அபிவிருத்தி செய்யப்பட்டதும், மக்கள் குடியேறிவிடுவார்கள் என்பதில்லை. காணி அபிவிருத்தித் திட்டங்களுக்குப் போக்குவரத்து வசதிகளையும், காடு அழிக்கப்படுதலினால் ஏற்படக்கூடிய மண் அரிப்புக்களைத் தடுக்க வடிகால்களையும், கூட்டுறவுச் சங்கம் போன்ற பொது நிறுவனங்களுக்கு வேண்டிய கட்டிடங்களையும் அரசு நிறுவிக்கொடுக்கிறது. இவற்றுக்குப் பெருந்தொகையான பணம் செலவாகிறது.

திட்டம் ஆரம்பிக்கப்படுகையில், எல்லோரும் சேர்ந்தே கூட்டாகக் காட்டைத் துப்பரவுபடுத்துகிறார்கள். அப்போது நிறுவப்படும் தற்காலிக கட்டிடங்களுக்கும் குசினிச் சாமான்களுக்கும்கூட நியாயமான அளவு பணம் செலவாகிறது.

**நிருவாகம்**

இத்திட்டங்களை நிருவகிக்கும் பணியுடன் ஏறக்குறைய **150** அரச உத்தியோகத்தர்கள் நேரடித்தொடர்பு கொண்டுள்ளார்கள். அடர்ந்த காட்டை வாலிபர்கள் பல கஷ்டங்களுக்கிடையே பாடுபட்டுச் செழிப்பான பூமியாக்குகிறார்கள். தொடக்கத்தில், அவர்கள் **25** பேர் கொண்ட தனித்தனிக் குழுக்களாகவே காடு துப்புரவுபடுத்தும் வேலையில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறு அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து உழைப்பதனால் அவர்களிடையே ஒருவித உயர்ந்த கூட்டுணர்வும் சமூகஉறவும் ஏற்படுகின்றது. தங்களுக்கு உணவு தயாரிக்கும் பணியிலும் அவர்கள் மாற்றுமுறை எடுத்து ஈடுபடுகிறார்கள். இரண்டாவது கட்டத்தில் அவர்கள் ஐந்துபேர் கொண்ட குழுவாகச் சேர்ந்து உழைக்கிறார்கள். கடைசியாக ஒவ்வொரு வாலிபருக்கும் **3½** அல்லது அதிலும் குறைந்த அளவு நிலம் பிரித்துக்கொடுக்கப்படுகிறது.

வாலிபர் திட்டத்தின் ஒவ்வொரு அபிவிருத்தி அம்சத்தையும் திறம்பட வகுத்து நிருவகித்தற்கு பல உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வாலிபர் திட்டங்களையும் அந்தந்த அரசாங்க அதிபரது நிருவாகத்தின் கீழ் அந்தந்த விஷயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்கள் கவனிக்கிறார்கள். நிதி ஒதுக்குதல், திட்டத்தை ஆரம்பித்தல், நிறைவேற்றுதல் போன்ற வேலைகள் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் கவனிக்கப்படுகின்றன.

**சேவைகள்**

வாலிபர் திட்டங்களில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பயிர்ச்செய்கைக்கு அவசியமான உரம், பூச்சிகொல்லி மருந்துகள் போன்றவற்றை தக்க காலத்தில் வேண்டிய அளவில் பெற்றுச் கொடுப்பதற்கு உதவியாக இருக்கின்றன. அதேபோல, ஊர்களிலிருந்து தூரத்தில் வாழும் இப்படியான வாலிபர்களுக்கு அவசியப்படும் உணவுப்பொருட்களும் இக் கூட்டுறவுச் சங்கங்களினால் கொண்டுவந்து தரப்படுகின்றன. இவற்றால் ஊர்மக்களும் பயனடைகின்றார்கள். சிலசமயங்களில் இத் திட்டங்களில் விளையும் பொருட்களும் இச் சங்கங்களால் சந்தைப்படுத்தப்படுகின்றன.

பெரிய திட்டங்களில் உற்பத்தியாகும் பொருட்களைத் திரட்டித் தரப்படுத்தி, நிறுத்துப் பணஞ்செலுத்தி வாங்குவதும், அவற்றை வாகனங்களில் எடுத்துச்சென்று நல்ல விலைக்கு விற்பதும் சுலபமான வேலையில்லை. தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் மோசடிக்காரர்களுக்கும் இடையில் நிலவும் போட்டி காரணமாக இத்தகைய அலுவல்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் சிலசமயங்களில் கவனிக்க வேண்டியேற்படுகிறது. இச்சங்கங்களின் இயக்குநர் சபைக்கு வாலிபர் திட்டங்களில் உள்ள இளைஞர்களும் உறுப்பினர்களாக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி

# டிறினிட்டி கல்லூரியின் விவசாயப் பண்ணை

இன்று எம்நாட்டு மக்கள் யாவரும் கமச்செய்கையில் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். மக்களுக்குத் தேவையான உணவுத்தானியங்களையும், பொருட்களையும் இந்நாட்டிலேயே விளைவிப்பதற்கு அரசு தன்னால் முடிந்த உதவிகள் அத்தனையையும் தனிப்பட்டவர்களுக்கும், சங்கங்களுக்கும், சமாஜங்களுக்கும் வழங்கிவருகின்றது. ஆயினும் இது அப்படியொன்றும் சுலபமான வேலையல்ல. இத்தகைய பணிக்கு எல்லோரிடமிருந்தும் உதவியும், ஒத்துழைப்பும் கிடைத்தல் வேண்டும். இவ்விஷயத்தில் அரசு இளைஞர்களிடமிருந்தே கூடிய அளவு ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது. கமத்தொழிலைப்பற்றி முன்பிருந்த கருத்து இப்போது எவ்வளவோ மாறிவிட்டது. கமஞ் செய்து நல்ல வருவாய் பெறலாம் என்ற கருத்து நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது.

பள்ளிப் பிள்ளைகளும் கடந்த சில காலமாகக் கமஞ்செய்வதில் அக்கறை காட்டி வருகின்றார்கள். பலசமயங்களில் அவர்கள் சிரமதானத்தின் மூலம் களை பிடுங்குதல், வழி - வரம்பு - வாய்க்கால்களைத் துப்பரவுபடுத்தல் போன்ற வேலைகளுடன் மாத்திரம் நின்றுவிடுவதில்லை. பல பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு, வெற்றிகண்டும் வருகின்றார்கள்.

வெற்றிகரமாக நடக்கும் கமச்செய்கைக்கு உதாரணமாகக் **கண்டி டிறினிட்டி கல்லூரி**யின் விவசாயப் பண்ணையைக் குறிப்பிடலாம். அந்தப் பள்ளிக்கூட ஆசிரியர்களதும் பிள்ளைகளதும் தளரா ஊக்கத்துடனும், ஒத்துழைப்புடனும் இப்பண்ணை சிறப்பாக இயங்கிவருகின்றது. டிறினிட்டி கல்லூரிப் பண்ணையில், ஆசிரியர்களுள் ஒருவரான **திரு. டபிள்யூ. சின்னத்தம்பி** இப்பண்ணையை முன்நின்று நடத்துகிறார். அவர் இப்பண்ணைமீது காட்டும் ஆர்வத்தையும், அக்கறையையும் பாராட்டுகின்றார்கள். இந்த ஆசிரியர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் உயர் பட்டம் பெற்றவர். ஆயினும் அலுப்புச் சலிப்பு எதுவும் இல்லாது நாள் முழுவதும் பண்ணையில் நின்று வேலைகளைக் கவனிக்கின்றார். உண்மையில், எப்போதுமே எந்த வேலை செய்வதையும் அவர் தமது அந்தஸ்துக்குக் குறைவு என்று நினைப்பதில்லை. மாட்டுப்பட்டி, பன்றித் தொழுவம் எதையும் எவ்வித தயக்கமும் இல்லாது சுத்தஞ்செய்ய முன்வரும் திரு. சின்னத்தம்பி, உடல் உழைப்புக்குக் காட்டும் மதிப்பு எவருக்கும் நல்ல எடுத்துக்காட்டு. தமது வயதைப்பற்றிக்கூடக் கவனிக்காது இரவு பகல் என்று பாராது உழைக்கும் அவர், பண்ணை வேலையில் ஈடுபடத்தொடங்கிய பின்னர் தமக்குத் தலையிடிதானும் வந்ததில்லை என்று சொல்லுகிறார். பண்ணையில் அவர் கடைப்பிடிக்கும் சுலோகம் ''எங்களுக்குத் தேவையான உணவுப்பொருளை நாமே 110 நாட்களுள் விளைவிப்போம்'' என்பதாகும். இக்கல்லூரிப் பண்ணையின் வெற்றிக்கு திரு. சின்னத்தம்பி அவர்களின் பங்கு கொஞ்சநஞ்சமல்ல. அவர் இந்தப் பண்ணை தோன்றிய விதத்தையும் விளக்கிக் கூறினார்.

டிறினிட்டிக் கல்லூரி மாணவர்கள் மெய் வருந்தி உழைத்து, விவசாயம் செய்யும் அனுபவத்தைப் பெறவும், விவசாய வாழ்வுக்கு அவசியமானவற்றை அறிந்து கொள்ளவும், புத்தக அறிவுடன் செயல் அறிவை பெறுவதற்காகவும் இப்பண்ணை வெகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஊக்கமூட்டி சிறப்பாகப் பண்ணையை நடத்தும் ஆசிரியர் திரு. டபிள்யூ. சின்னத்தம்பி அவர்கள்.**

காலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. 1952 ஆம் ஆண்டில் குத்தகை நிலத்திலே விவசாயப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டபோதிலும், 1965 ஆம் ஆண்டில் நிலச் சொந்தக்காரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதாயிற்றும். அதன் பின் பண்ணைக்கு நிலம் பெறுவது பெரும் பிரச்சினையாகிவிட்டது. பல்லேகலைத் தோட்டத்தை அரசாங்கம் சுவீகரிக்க முன்னர், டிறினிட்டிக் கல்லூரி அதில் 50 ஏக்கரை விவசாயத்துக்காக விலைக்கு வாங்கியிருந்தது. ஆசிரியர் குழுவின் சேம நிதியிலிருந்து இந்நிலத்தில் விவசாயம் செய்ய ஓரளவு தொகையைக் கடனாகவும் பெறமுடிந்தது எனவும் திரு சின்னத்தம்பி தெரிவித்தார்.

கமத்திற்கு வேண்டிய கட்டிடங்களை நிறுவுதல் அடுத்துச் செய்யவிருந்த வேலையாகும். இதற்குச் செங்கல், மரம் போன்றவை தேவைப்பட்டன. வாங்கிய நிலத்திலிருந்தே இவற்றை பெற முனைந்தார்களாம். இப்போது அங்கு கட்டப்பட்டுள்ள மாட்டுப் பட்டி, களஞ்சிய அறைகள், பன்றித் தொழுவம் யாவும் அந்த நிலத்திலேயே அரிந்த செங்கல்லினாலேயே கட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இப்பணிகளில் கல்லூரி மாணவர்கள் பெரிதும் ஈடுபட்டு உழைத்துள்ளார்கள்.

இப்போது அந்த விவசாயப் பண்ணையில் ஏறக்குறைய 110 பசுக்கள் நிற்கும் பட்டியும் 250 பன்றிகள் நிற்கும் தொழுவமும் இருக்கின்றன. அங்கு நாள் ஒன்றுக்கு 300 பைந்து பால் வரையில் கிடைக்கின்றதாம். இப்பட்டி, தொழுவம் எல்லாவற்றையும் டிறினிட்டிக் கல்லூரி மாணவர்களே சுத்தஞ்செய்கின்றார்கள்.

ஐம்பது ஏக்கர் நிலத்தில் பத்து ஏக்கர் நிலம் பலவிதமான பயிர்களையும் நாட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைவிட நல்லாகக் காய்க்கக்கூடிய தென்னைமரங்கள் 750 கூட அந்நிலத்தில் நிற்கின்றன. நெல், சோளம், வத்தாளை, காக்காச் சோளம் போன்ற பயிர்களை நவீன முறையில் பயிரிடுகின்றார்கள். இப்பயிர்களை நடும்போது நிலத்தைத் துப்பரவாக்குதல், பண்படுத்துதல் கன்றுகளை நாட்டுதல் ஆகிய வேலைகள் அனைத்தையும் கல்லூரி மாணவர்களே திரு. சின்னத்தம்பியின் அறிவுறுத்தலின்படி செய்கிறார்கள். இப்படி முறையாகப் பயிரிடுவதனால் விளைச்சல் எப்போதும் சிறப்பாக இருக்கின்றது.

இந்தப் பண்ணையில் பயிரிடப்பட்டுள்ள 'சென்ரினியல்' என்ற வத்தாளை இனம் அதிக விளைச்சலைத் தருவதொன்றாகும். இரண்டு அல்லது மூன்று இறாத்தல் எடையுள்ள கிழங்குகளையும் இப்பண்ணையில் காணமுடிந்தது. காக்காச் சோளத்தை இப்பண்ணையில் நன்கு பயிரிட்டிருக்கின்றார்கள். இரண்டு ஏக்கரில் பயிரிடப்பட்ட காக்காச் சோளம் இலங்கையிலேயே ஆகக் கூடிய விளைச்சல் விகிதத்தைத் தந்துள்ளது.

இப்பண்ணையில் இன்னும் ஒரு சிறப்பு என்னவென்றால் எதையுமே வீணாக்காது பயன்படுத்துகிறார்கள். மாட்டுப்பட்டி, பன்றித்தொழுவம் கழுவும் தண்ணீர் வீணே போகவிடாது, வாய்க்கால் அமைத்து ஒவ்வொருவிதமான பயிருக்கும் பாய விடுகிறார்கள். பயிர்களுக்கு நல்ல உரச்சத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்மூலம் கிடைக்கின்றது. காக்காச் சோளத்தின் கதிர்களை அறுத்தபின்னர், பயிரின் தண்டுகளை வெட்டிப்பன்றிகளுக்குப் உணவாகக் கொடுக்கிறார்கள். பன்றிகள் தின்று, விட்ட மிகுதிகள் கூட்டுரக் கிடங்குகளில் போடப்படுகின்றன. இவ்வாறு எல்லாப் பொருட்களையும் பயன்படுத்தும் இலட்சியம் முன்மாதிரியானதாகும்.

இக்கல்லூரிப் பண்ணையில் காளான் வளர்ப்பும் தீவிரமாக நடக்கிறது. தனியாக அமைக்கப்பட்டுள்ள ஒரு கொட்டிலுக்குள் வைக்கோலைப் பரப்பி, அந்த வைக்கோல் தட்டுகளுக்கு மேல் காளான்களை வளர்க்கின்றார்கள். முதலில் விளைந்த காளான் கொழும்பில் உள்ள சர்வதேச ஹோட்டலுக்கு விற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. காளான் வளர்ப்புக்கு அவ்வளவு செலவு ஏற்படாது. இப்படியே செலவு அதிகரிக்காது இருந்தால் எவ்வளவு காளானும் விலைப்படும். காளான் செய்கையை மேலும் பெருக்குவதற்கு திரு. சின்னத்தம்பி உத்தேசிக்கிறார்.

டிறினிட்டிக் கல்லூரியின் இந்த விவசாயப் பண்ணையைப் பார்வையிட்ட வெளிநாட்டுத் தூதுவர்களும், வெளிநாடுகளிலிருந்து வந்த பிரமுகர்களும் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். அண்மையில் அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த ஒரு பத்திரிகையாளர் இந்தப் பண்ணையைப்பற்றி விளக்கமாகவும் புகழ்ந்தும் இலங்கை வானொலியில் பேசியிருந்தார்.

இந்த விவசாயப் பண்ணையிலிருந்து இப்போது ஓரளவு ஆதாயம் கிடைக்கிறதாம் அப்படியாகக் கிடைக்கும் ஆதாயம் பண்ணையை மேலும் விருத்திசெய்யப் பயன்படுத்தப்படுகிறதாம். விவசாயம் செய்து சீவிக்க விரும்புகிறவர்கள் பலர் இந்தப் பண்ணையில் தங்கியிருந்து டிறினிட்டிக் கல்லூரி மாணவர்களுடன் சேர்ந்து பண்ணையில் வேலை செய்து விவசாயம் பற்றிய அடிப்படை அறிவைப் பெறுகிறார்கள். ஐம்பது ஏக்கர் நிலமானதால், நாளாந்தம் நியாயமான வேலைகள் செய்வதற்கு இருக்கும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகுப்புப்பிள்ளைகள் சுமார் 50 பேர் வரையில் வந்து பண்ணையில் முற்பகல் முழுவதும் வேலை செய்வார்களாம். டிறினிட்டிக் கல்லூரி போன்ற பெயர்பெற்ற பள்ளிக்கூடம், விவசாயத்துக்கு முதலிடம் கொடுத்துச் செயற்படுதல் எதிர்காலத்துக்கு ஒரு நல்ல அறிகுறி என்றுதான் சொல்லவேண்டும்.

கண்டி நகரமும், டிறினிட்டிக் கல்லூரியும் பெருமைப்படக்கூடிய அளவுக்கு இந்த விவசாயப் பண்ணை நடைபெறக் கல்லூரி அதிபருக்கு ஆசிரியர் குழுவும் மாணவர்களும் பூரண ஆதரவு அளிக்கின்றார்கள். இந்தக் கல்லூரிக்குப் போன்று ஏக்கர் கணக்கில் காணி இல்லாவிட்டாலும், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கரிலாவது மற்றப் பாடசாலைகளும் விவசாயம் செய்ய முனைந்தால், நாட்டின் உணவுப் பிரச்சினையைப் போக்க உதவியவர்களாக இருப்போம் என திரு. சின்னத்தம்பி அபிப்பிராயப்பட்டார். “எங்கள் உணவை நாங்களே 110 நாட்களில் உற்பத்தி செய்வோம் என்ற இலட்சியத்தை அனுசரித்து” நாங்கள் உற்சாகத்துடன் உழைத்தால் உணவுப் போராட்டத்தில் வெற்றி ஈட்டலாம் என்பதில் சந்தேகமே இல்லை.

# விவசாய சேவை நிலையங்கள்

14 புதிய விவசாய சேவை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றுள், கீரிமலை, உடுவில், நல்லூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள நிலையங்களும் அடங்கும்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம்வரை மொத்தம் 112 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எல்லாமாக 438 விவசாய சேவை நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின்

# ஆராய்ச்சிப் பணிகள்

**கமநலத்துறைக்கு அவசியமான பலவகைச் சேவைகளைப்பற்றிக் கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. சிறப்பாக, நிலத்திலிருந்து ஆகக்கூடிய விளைச்சலைப் பெறுதல், கூட்டுறவுச் சங்கம், பயிர்ச்செய்கைக் குழு ஆகியவற்றின் அலுவல்கள், விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தல், அபிவிருத்திப் பணியைப்பற்றிய கருத்துப் பரிமாறலில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் ஆகிய பிரச்சினைகளுக்கு விசேட கவனம் செலுத்தி, நிறுவகம் பலவகையான ஆராய்ச்சிப்பணிகளை மேற்கொள்ள முனைகிறது. இந்நிறுவகம், ஆரம்பிக்கப்பட்ட இரண்டு வருடங்களுள் கமநலத்துறை தொடர்பான பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. இத்தகைய ஆராய்ச்சிகளினால் கண்ட முடிபுகளையும் ஆராய்ச்சியாளர் தரும் ஆலோசனைகளையும் விவசாயத்துக்கான கொள்கைகளை வகுப்போருக்கு எடுத்துச் சொல்லுதலே இந்த நிறுவகத்துக்கு உள்ள பிரதான பணிகளில் ஒன்று.**

## 1971 சிறுபோகத்தில் நெல் விளைச்சலுக்கு ஏற்பட்ட செலவு

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் அதன் முதலாவது ஆராய்ச்சியாக, 1972 ஆம் ஆண்டுச் சிறுபோக நெல் விளைச்சலுக்கு ஏற்பட்ட செலவை ஆராய்ந்து அறிய முயன்றது. அந்நேரம் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பலர் இல்லாததினால் இலங்கை முழுவதையும் கருத்திற்கொண்டு இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதெனச் சொல்ல முடியாது. இந்த ஆராய்ச்சிக்காக ஐந்து மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவை: அம்பாந்தோட்டை, பொலநறுவை, குருநாகலை, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களாகும். அவற்றிலும் இந்த ஆராய்ச்சியில் பங்குபற்றி ஒத்துழைப்புத் தர விரும்பிய விவசாயிகளே தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அந்தச் சிறுபோகத்தின்போது நெல் பயிரிட அவர்கள் செலவு செய்த தொகைகளை அறிக்கைப் புத்தகங்களில் குறித்தெடுத்து, அந்தப் புள்ளி விவரக் கணக்குகளின் அடிப்படையில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. விளைச்சலினால் கிடைக்கும் வருவாயிலிருந்து நெற்செய்கைக்கு ஏற்பட்ட செலவு முழுவதையும் கழித்து இலாபம் கிடைக்கின்றதா என்பதையும், அப்படி இல்லாது நட்டம் வந்தால், ஏன் அந்த நட்டம் வந்தது என்பதையும் கண்டு பிடிப்பது தான் இந்த ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம். நெற்செய்கைக்குக் கூலி ஆட்கள் பிடிப்பதனால் பெரும் செலவு ஏற்படுகிறது. அதனால் குடும்பத்தினரே நெற்செய்கை வேலைகளில் உதவி செய்தால் செலவைக் குறைக்க முடியும் என்பதைக் கண்டறியவும் இந்த ஆராய்ச்சி துணையாக இருந்தது. இந்த மாவட்டங்களில் ஓர் ஏக்கர் வயலில் விவசாயம் செய்ய ஏற்படும் செலவும், ஒரு புசல் நெல்லை உற்பத்தி செய்வதற்கு ஏற்படும் செலவும் எவ்வளவு எனக் கணிக்கப்பட்டது.

நெற்செய்கைக்கு வேண்டிய பல்வேறு சேவைகளையும், அதற்குக் கடைப்பிடிக்கும் பல்வேறு முறைகளையும்பற்றி விவசாயிகளிடமிருந்தே தகவல் பெறப்பட்டு முதலாவது ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்டது.

அந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்த காரணங்களை உள்ளடக்கி அறிக்கை ஒன்றை இந்நிறுவகம் வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை மூலம் வெளியாகியுள்ள விடயங்கள் விவசாயிகளுக்கும் பல வழிகளிலும் உதவியாக இருக்கும். இந்த அறிக்கையின்படி பொலநறுவை மாவட்டத்திலேயே ஆகக் கூடுதலான ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. அத்துடன், அங்குள்ள விவசாயிகளுக்கே ஆகக் கூடிய நெல் விளைச்சலும் கிடைத்தது. இங்கு நிலத்தில் ஈரலிப்புக் குறைவாக இருக்கையில் டிறக்ரரையும், சதுப்புத் தன்மை கூடுதலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்போது எருமை மாடுகளையும் பாவிக்கிறார்கள். கடந்த பத்து வருடங்களிலும் அம்பாந்தோட்டை, பொலநறுவை மாவட்டங்களில் வரட்சிக் காலங்களில் எருமை மாடுகளை விவசாயத்துக்குப் பயன்படுத்தல் வெகுவாகக் குறைந்துள்ளது. ஆராய்ச்சிக்கு உட்பட்ட இந்த ஐந்து மாவட்டங்களிலும் விவசாய வேலைகளுக்குக் கூலிக்காரர்களைப் பயன்படுத்தியமை அதிகமாகியுள்ளதெனத் தெரியவருகிறது.

இந்த ஐந்து மாவட்டங்களிலும், பொலநறுவை விவசாயிகளுக்கே விவசாயம் செய்வதற்கு ஏக்கருக்கு ஆகக் கூடிய செலவு ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு ஓர் ஏக்கரில் நெல்விளைவிக்க ரூபா. 733/- செலவாகியிருக்கிறது. ஏக்கருக்கு ஆகக் குறைந்த செலவான ரூபா. 532/- அம்பாந்தோட்டை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. ஆட்கூலியினாலேயே விவசாயச் செலவு பெரும்பாலும் அதிகரிக்கிறது என்பது இந்த ஆராய்ச்சியினால் தெரியவந்த உண்மையாகும். அம்பாந்தோட்டையில் நெல் விளைச்சலுக்கு ஏற்பட்ட முழுச் செலவில் 51 சதவீதம் ஆட்கூலிக்கே போயுள்ளது. கண்டி மாவட்டத்தில் இச்செலவு இன்னும் அதிகம். ஐந்து மாவட்டங்களிலும் ஆட்கூலியே அதிகமாகவுள்ளது. பசளை போன்றவற்றுக்கு ஏற்பட்ட செலவிலும் பார்க்க ஆட்கூலியே அதிக செலவை ஏற்படுத்தியுள்ளதை இவ்வாராய்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

நெல் விளைச்சலினால் ஏற்பட்ட இலாபத்தை மதிப்பிடும்போது, கண்டி மாவட்டத்தில் விவசாயக் குடும்பம் ஒன்றுக்கு ஓர் ஏக்கரில் கிடைத்த சராசரி இலாபம் அதிகமாக இருந்தது. இதற்குக் காரணம், அந்த மாவட்டத்தில் குடும்பத்தவர்களே கமவேலைகளில் அதிகம் ஈடுபடுகிறார்கள், கூலியாட்களை அதிகம் பிடிப்பதில்லை. இந்த ஐந்து மாவட்டங்களும் நெற்செய்கைக்கான பசளையை எடுத்திருந்தன. மற்றையவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட பசளையிலும் பார்க்க 5 மாவட்டங்களிலும் நெற்செய்கைக்குப் பாவிக்கப்பட்ட பசளையின் அளவே கூடுதலாகும்.

இந்த ஆராய்ச்சியில் கலந்து கொண்ட கமக்காரர்கள் எல்லோரும் குத்தகைக் காரர்கள் என வைத்துக்கொண்டு கமக்காரக் குடும்பம் ஒன்றுக்குச் சாதாரணமாக ஏற்படும் செலவு கணக்கிடப்பட்டது. வரட்சி வலயத்தில் கமக்காரர்கள் அநேகமாகத் தமக்குக் கிடைக்கும் ஆதாயத்தில் 20 சதவீதத்தை நிலச் சொந்தக்காரர்களுக்குக் குத்தகைக் கூலியாகக் கொடுக்கிறார்கள். ஈரலிப்பு வலயத்தில் இது விளைச்சலில் அரைவாசியாக இருக்கிறது. இவ்வாறு ஏற்படும் குத்தகைக் கூலியையும் ஏனைய கமச்செலவுகளுடன் சேர்த்துப்பார்த்தால், பொலநறுவை மாவட்டத்தைத் தவிர மற்ற நான்கு மாவட்டங்களிலும் ஆதாயம் பெறுதவற்குக் கமக்காரர் குடும்பங்களுக்கு இடமில்லை. வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளுக்கு வேண்டிய டிரக்டர், களைகொல்லி, பூச்சி கொல்லி போன்ற மருந்துகள் வேண்டிய அளவு இறக்குமதி செய்ய முடியாதிருப்பதால், அதிக விளைச்சலைப்பெறுவது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால், குடும்பத்தில் உள்ளவர்களே கமவேலையில் பாடுபட்டு உழைப்பதன் மூலமும், உள்நாட்டில் கிடைக்கக் கூடிய பொருட்களை விவசாயத்துக்குப் பயன்படுத்துவதன் மூலமும் விவசாயிகள் தங்களுக்குள்ள சிக்கல்களை ஓரளவுக்குத் தீர்த்துக்கொள்ளமுடியும். அப்போதுதான் விவசாயிகளின் இலாபத்தைப் பெருக்க இயலும்.

**பயிர்ச்செய்கைக் குழுக்கள்**

கேகாலையில் உள்ள பெமினிவத்தை விவசாய உற்பத்திக் குழுவுக்குரிய பிரதேசத்தை கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம் அதன் வெளிக்கள ஆராய்ச்சித் தலமாகக் கொண்டுள்ளது. இங்குள்ள **கெஹெல்பன்னல, அளுத் நுவர** ஆகிய இரண்டு பயிர்ச்செய்கைக் குழுக்களைப்பற்றி ஆராய்ந்து, அவை வகுத்து நிறைவேற்றிய வேலைத்திட்டங்களைப் பற்றியும், நிறை வேற்றிய விதத்தைப்பற்றியும், கிராம மக்களுக்கு பயிர்ச்செய்கைக் குழுக்களின் மூலம் நல்ல முறையில் பணியாற்ற முடியுமா என்பதையும் அறிய முயற்சி செய்யப்பட்டது. மேற்சொன்ன இரண்டு பயிர்ச்செய்கைக் குழுக்களிலும் ஒன்று வெற்றிகரமாகச் செயற்பட்டதற்கும், மற்றது அப்படி இல்லாததற்கும் காரணம் என்ன என்பது ஆராய்ச்சியின் மூலம் தெளிவாகியது.

எந்தவொரு இயக்கமானாலும், அதன் தலைமை அம்சத்தைக் கொண்டுதான் அது வெற்றிகரமாக இயங்குவதை நிர்ணயிக்க முடியும். கெஹல்பன்னல, அளுத் நுவர ஆகிய பயிர்ச்செய்கைக் குழுக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தை ஆராய்ந்தபோது இந்த உண்மை புலப்பட்டது. கெஹெல்பன்னல பயிர்ச்செய்கைக் குழு திறம்பட இயங்கிய தற்கு அதில் பதவி வகித்தவர்களும், அதன் உறுப்பினர்களும் முக்கிய காரணகர்த்தாக்களாவர். கிராமத்துக் கமக்காரர்களுக்குள்ள கஷ்டங்களை அவர்கள் நல்லாக அறிந்திருந்ததால், பயிர்ச் செய்கைக் குழுவின் அலுவல்களுக்கு மக்களின் ஒத்துழைப்பையும் திரட்ட முடிந்தது. அளுத்நுவர பயிர்ச் செய்கைக் குழுவுக்கு இத்தகைய தலைமை வாய்க்கவில்லை. கெஹெல்பன்னல பயிர்ச் செய்கைக் குழுவில் பதவி ஏற்றவர்களும் உறுப்பினர்களும் கமத்தொழிற் பிரச்சினைகளை அறிந்து, அவற்றைக் களைய ஆர்வத்துடனும் அக்கறையுடனும் ஈடுபட்டார்கள். கிராம அபிவிருத்திக்காகப் பல மாற்றங்களைப் புகுத்த முனைந்த அவர்களுடன் அப்பகுதியில் செயற்பட்ட அரச நிறுவனங்களும் பூரணமாக ஒத்துழைத்தன. கமத்தொழில் வளர்ச்சிக்கு அதிக அக்கறை காட்டாத அளுத்நுவர கமக்செய்கைக் குழுவுக்கு இத்தகைய ஒத்துழைப்புக் கிட்டவில்லை.

ஓர் அலுவலகத்தை நிறுவி, ஒழுங்காகக் குழுக்கூட்டங்களை நடத்தி வந்த கெஹெல் பன்னல பயிர்ச் செய்கைக் குழு கமக்காரர் பெயர்களைக் கொண்ட இடாப்பு, பயிரிடுதற்கான கால அட்டவணை போன்றவற்றைத் தயாரித்தல், நீர்ப்பாசன வேலைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றைச் செம்மையாகக் கவனிக்க முடிந்தது. அதேபோல, குத்தகைக் கமக்காரர்களின் உரிமைகளையும் கவனித்ததால், கிராம மக்களுக்கு நல்லமுறையில் சேவை செய்யும் ஒரு நிறுவனம் என்ற பெயரையும் அது பெற முடிந்தது. அதன் நிதி நிலையும் ஏக்கர் வரி திரட்டலும் செம்மையாக இருந்தன. அதனால் பல வேலைகளையும் தாமதமின்றிச் செய்யமுடிந்தது. அளுத்நுவர பயிர்ச்செய்கைக் குழுவைப்பற்றி இவ்வாறு எதுவும் சொல்லக்கூடியதாக இருக்கவில்லை. கெஹெல்பன்னல பயிர்ச் செய்கைக் குழு போன்ற நிறுவனங்களுக்கு முறையான பயிற்சியும், வழி நடத்தலும் கிடைக்கப்பெற்றால் கிராம மட்டத்தில் நன்கு செயற்படும் நிறுவனங்களாக அவை திகழ முடியும் என்பதே இந்த ஆராய்ச்சியினால் புலப்பட்ட ஓர் உண்மை.

அளுத்நுவர பயிர்ச்செய்கைக் குழு அதன் வேலைத் திட்டத்தை வகுக்க, கமக்காரர்களை அழைத்துக் கூட்டம் நடத்த முடிவு எடுக்கவில்லை. வேலைத்திட்டத்தை நிறைவேற்ற உதவக் கூடியவர்களிடமிருந்து அவர்களது கருத்துக்களையும் அறிய அக்குழு எத்தனிக்கவில்லை. இதனாலேயே அதன் திட்டங்கள் அவ்வளவாக வெற்றியளிக்கவில்லையென்பது ஆராய்ச்சியில் ருந்து தெரிய வந்தது.

இந்தப்பயிர்ச் செய்கைக் குழுக்களைப்பற்றி விசாரித்து அறிந்தபின்னர், அவை திறம்படச் செயற்படப் பல ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன. பயிர்ச் செய்கைக் குழு எல்லாக் கமக்காரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நிறுவனமாக விளங்கவேண்டும். அத்துடன், அவ்வப்பகுதிக்குள்ள விவசாயப் பிரச்சினைகளை நன்கு அறிந்துள்ள கமக்காரர்களையும் அத்தகைய குழு உறுப்பினராகக் கொண்டிருத்தல் வேண்டும்.

### மரக்கறிச் செய்கையும் சந்தைப்படுத்தலும்

பதுளை மாவட்டத்தில், வெலிமடைப் பகுதியில் உள்ள நான்கு கிராமங்களில் நடக்கும் மரக்கறிச் செய்கை பற்றியும், அந்த மரக்கறி வகைகளைச் சந்தைப் படுத்துதல் பற்றியும் இந்நிறுவகம் ஆராய்ச்சி நடத்தியது. **ஹரக்கமகந்த, கிராம்பே, உடுபாதன, தம்பவின்ன** ஆகிய நான்கு கிராமங்களில் மரக்கறி விளைவிக்கும் கமக்காரர்களையும், அவற்றைப் பல வழிகளில் சந்தைப்படுத்த உதவும் ஆட்களையும் சந்தித்து அவர்களிடமிருந்து கேட்டறிந்த விவரங்களை அடிப்படையாகக் கொண்டே அந்த ஆராய்ச்சி நடத்தப் பட்டது. மரக்கறி விளைவித்தலில் ஈடுபடும் கமக்காரனிலிருந்து உண்பதற்கு மரக்கறியை விலைக்கு வாங்குபவர் வரையுள்ள பல் வேறு நிறுவனங்களைப்பற்றியும் இவ்வாராய்ச்சியின்போது விசாரித்தறியப்பட்டது.

மரக்கறி விளைவிப்பவர்கள் அவற்றைச் சந்தைப்படுத்தும் விதம், மரக்கறி விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கமும், அது போன்ற மற்றும் தாபனங்களும் செயற்படும் விதம், நன்கு விருத்தியடைந்த கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் முறை இருந்தும், தனிப்பட்ட வியாபாரிகளுக்கு இன்னும் முதலிடம் கிடைத்தற்கான காரணம், மரக்கறி விளைவிப்போருக்கு நல்லவிலை கிடைக்கிறதா போன்ற விடயங்களை ஆராய்ந்து அறிய முனையப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நான்கு கிராமத்து மக்களுக்கும் பிரதான பிழைப்பு மரக்கறிச் செய்கை தான். அவர்கள் தங்கள் உணவுக்காக மாத்திரமே நெல் விளைவிக்கிறார்கள் சாதாரணமாக போஞ்சி, உருளைக்கிழங்கு, கோவா ஆகியவற்றையே அவர்கள் பயிரிடுகிறார்கள்.

விற்பனை செய்யும் நோக்கத்துடன் மரக்கறி விளைவிக்கும் இக்கமக்காரர்களுக்கு எப்பொழுதும் பணம் தேவைப்பட்டுக்கொண்டிருக்கும். பசளை, மரக்கறி விதைகள், பூச்சி கொல்லி மருந்துகள் போன்றவற்றுக்குத்தான் அதிக பணம் தேவைப்படும். சில சமயங்களில் மரக்கறியைச் சந்தைப்படுத்துவதற்கு ஏற்படும் செலவில் 30 சதவீதம் ஏற்றியிறக்கல் அதாவது லொறிக்கூலியாகவே இருக்கும். இப்பகுதியில் மரக்கறி விளைவிப்போர் எல்லோரும் கடனில் மூழ்கியிருப்பது அவர்களிடையே காணக்கூடிய ஒரு பொது அம்சமாகும். அவர்கள் கூட்டுறவுச் சங்கம், கிராமிய வங்கி, தனிப்பட்டவர்கள் ஆகிய பலதுறைகளிலும் கடன் எடுக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கு மாத்திரமே கடன் வழங்குகிறது. அதனால் மற்ற மரக்கறி வகைகளைப் பயிரிடத் தனிப்பட்ட முதலாளிமாரை நாடிக் கடன் பெற வேண்டியிருக்கிறது. இதனாலேயே, தனிப்பட்ட வியாபாரிகள் முதன்மை வகிக்கும் ஹாத்தகமகந்த, உடுபாதன ஆகிய இரு கிராமங்களிலும் விளைவிக்கப்படும் மரக்கறியின் தொகையும் அவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயும், கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் முறை பிரதானமாகவுள்ள கிராம்பே கிராமத்து மக்களுக்குக் கிடைப்பதிலும் பார்க்கக் கூடுதலானது என்பதைக் காணகூடியதாக இருந்தது.

மரக்கறி வகைகளை விற்பனைப்படுத்தச் சந்தைக்கு அனுப்புதற்குள்ள இரண்டு வழிகளில் ஒன்று கூட்டுறவு முறை; மற்றது தனிப்பட்ட முறையில் சந்தைக்குக் கொண்டுபோய் விற்பது. இவை இரண்டு வழிகளிலும் முக்கிய இடம் தனிப்பட்டவர்களுக்கே கிடைக்கிறது. இப்பகுதியில் மரக்கறி விளைவிப்பவர்களிடையே சந்தைப்படுத்தற் திணைக்களம் அவ்வளவு செல்வாக்குப் பெறவில்லை. லொறிக் கூலியைக் குறைக்க முடிந்தால் மரக்கறி விளைவிப்பவர்களின் இலாபத்தை அதிகரிக்க முடியும் என மரக்கறி உற்பத்தியாளர்கள் கருதுகின்றனர்.

உருளைக்கிழங்குச் செய்கைக்கு விதை கிழங்கைக் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்தே பெற்றபோதிலும், தங்களின் உருளைக் கிழங்கு விளைச்சலைக் கூட்டுறவுச் சங்கத்துக்கு விற்பவர்கள் மிகச்சிலரே ஆவர். கூட்டுறவுச் சங்கத்திலும் பார்க்க தனிப்பட்ட வியாபாரிகள் மரக்கறிக்கு நல்ல விலை கொடுப்பதனால், அவர்களுக்கே அதிக மரக்கறி கிடைக்கிறது. உண்மையில் பாளுகமைப் பகுதியிலிருந்து கொழும்பிலுள்ள மொத்த விற்பனைச் சந்தைக்கு வரும் மரக்கறிவகைகளில் 90 சதவீதம் தனிப்பட்ட விற்பனையாளர்கள் மூலமாகவே வருகிறது என இந்த ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகிறது.

கூட்டுறவுச் சங்கத்திற்கு இப்படியானவர்களுடன் போட்டியிட முடியும். அவர்களைப் போலப் பெருந்தொகையான மரக்கறியை வாங்க முடிந்தாலே அவ்வாறு போட்டியிடலாம். இதற்கும் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்வனவு நிலையங்களது எண்ணிக்கை இப்போதிலும் பார்க்க அதிகரிக்கப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கத்திற்கும் மரக்கறி விளைவிப்போருக்கும் இடையில் நல்லதொடர்பு ஏற்படுவதனால், அவர்களுக்குக் கடன் வழங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கம் திட்டம் வகுக்க வேண்டும். அதேபோல, கூட்டுறவுச் சங்கம் எல்லா வகையான மரக்கறிகளிலும் கூடுதலான அளவில் வாங்க முற்படவேண்டும். இல்லாவிட்டால் எதிர்காலத்திலும் தனிப்பட்ட வியாபாரிகளே மரக்கறி விற்பனையில் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொள்வர். சந்தைப்படுத்தற் பகுதியும், கூட்டுறவு இயக்கமும் இணைந்து ஓர் ஏற்பாட்டைச் செய்தால், மரக்கறிவிளைவிப்போருக்கு நல்ல விலை கிடைக்கவும், நுகர்வாளருக்குக் குறைந்த செலவு ஏற்படவும் வழி பிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[நாளைய சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழப்போகும் மாணவருக்காக இது எழுதப்படுகிறது]

# இலங்கையில் கமத்தொழில்

**கமத்தொழில்மீது இன்று இலங்கையில் வாழும் மக்களில் எல்லாத் தரத்தினரும், எல்லா வயதினரும் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர். வாலிபர்கள் அநேகமாகக் கூட்டுறவுப் பண்ணைகளிலும், கூட்டுறவுக் கிராமங்களிலும் சேர்ந்து கமஞ் செய்யத் தொடங்கியுள்ளனர். பள்ளிப் பிள்ளைகளும் முன் ஒருபோதும் இல்லாதவாறு கமத்தொழிலில் கவனஞ்செலுத்துகின்றனர். கமத்தொழிலில் ஈடுபடும் இளம் சமுதாயத்திற்கும், கமத்தொழிலை ஒரு பாடமாகப் பயிலும் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் பயன்படவேண்டும் என்ற நோக்கத்துடன், "கமநலம்" இதழில் கமத்தொழில்பற்றிய கட்டுரைத் தொடரை வெளியிட எண்ணியுள்ளோம். இலங்கையின் நில அமைப்பின் தன்மை, கமச்செய்கைக்கான பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், பெருந்தோட்டத்துறை, கமத்தொழிலும் அதனுடன் தொடர்புபட்ட தாபன நடவடிக்கைகளும் ஆகிய விடயங்கள் தொடர்பாகக் கட்டுரைகள் வெளிவரும். இக்கட்டுரை வரிசையில், இலங்கையில் நடைபெறும் கமத்தொழிலை இந்தக்கட்டுரை பொதுவாக அறிமுகப்படுத்துகிறது.**

இலங்கையில் விவசாயத்தை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: உணவுப் பயிர்ச்செய்கையும் அதனுடன் தொடர்புபட்ட தேசிய விவசாயமும்; தேயிலை, றப்பர், தென்னை போன்ற வர்த்தகப் பயிர்களும் பெருந்தோட்டத் தொழில்களும் உணவுப் பயிர் விவசாயத்துறையில் நெற் செய்கைக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகிறது. சிறிய நிலச் சொந்தக்காரர்களான கமக்காரர்கள் உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகையில், பெரிய, சிறிய தோட்டங்களில் வர்த்தகப் பயிர்கள் செய்கை பண்ணப்படுகின்றன. இவ்விரு விவசாயத்துக்கும் உள்ள வேறுபாடு இலங்கையில் முக்கியத்துவம் பெறுகிறது.

மழை வீழ்ச்சி அடிப்படையில் இலங்கையின் விவசாய பிரதேசங்கள், வரண்டவலயம், ஈரலிப்பு வலயம் என்ற இரண்டு வலயங்களுள் அடங்குகின்றன. வருடத்தில் 75 தொடக்கம் 200 அங்குலம் வரை மழை வீழ்ச்சி பெறும் பகுதிகள் ஈரலிப்பு வலயத்துக்குள் வரும். இவ்வலயத்திலேயே அநேகமாக தேயிலை, றப்பர், தென்னை போன்றவை வளர்கின்றன. பெருந்தோட்டத் தொழில் இவ்வலயத்தில் முக்கிய இடத்தைப் பெற்ற போதிலும், அங்கு வாழும் கிராம மக்களுக்குச் சொந்தமான சிறிய நிலங்களில் நெல்லும் ஏனைய ஈரவலயப் பயிர்களும் விளைவிக்கப்படுகின்றன. ஈர வலயத்தில் உள்ள விவசாய நிலத்தில் மிக அதிகமான பாகத்தில் விவசாயம் நடைபெறுகிறது. நாட்டின் மூன்றில் இரண்டு பாகம் வரண்ட வலயத்தினுள் வருகிறது. வரண்ட வலயத்தின் வருடாந்த மழை வீழ்ச்சி 75 அங்குலம் வரையிலேயே இருக்கும். அதிலும், அதிக மழை வீழ்ச்சி ஒக்ரோபர் மாதத்திலிருந்து ஜனவரி மாதம் வரையிலுள்ள கால எல்லையினுள் நிகழ்கிறது. இதன் காரணமாக பெப்ரவரி மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை இந்த வலயத்தில் அநேகமாக வரட்சியே நிலவுகிறது. நாட்டின் தென்கிழக்கு, வடமேற்குப் பாகங்களைத் தவிர ஏனைய பாகங்களில் ஆண்டு தோறும் 50 அங்குலத்திற்கு மேலான மழை வீழ்ச்சி ஏற்படுகிறது. வருடாந்த மழைவீழ்ச்சிக்கேற்ப இரு வலயங்களாகப் பகுக்கப்படும் நாடு, கடல் மட்டத்திலிருந்து காணப்படும் உயர வேறுபாடுகளுக்கு அமைய மற்றும் பல பகுதிகளாகவும் பகுக்கப்படுகிறது.

எங்கள் நாட்டின் இந்த இரு வலயங்களுள்ளும் ஒரு கோடியே அறுபத்து இரண்டு இலட்சம் ஏக்கர் நிலம் அடங்கியுள்ளது. இவற்றுள் 67 இலட்சம் ஏக்கர் நிலமே பயிரிடுவதற்கு ஏற்றது. இப்போது 35 இலட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் நடைபெறுகிறது. இதிலும், 28 இலட்சம் ஏக்கர் நிலம் ஈரலிப்பு வலயத்துள் வருகிறது. மிகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான 7 இலட்சம் ஏக்கர் நிலம் மாத்திரமே வரண்ட வலயத்தில் இப்போது பயிரிடப் படுகிறது.

நாட்டின் விவசாயத்தில் முக்கிய இடம் வகிக்கும் நெற்செய்கையைக் கவனிப்போம். வருடத்தில் இருமுறை நெல் விளைவிக்கப் படுகிறது. இவற்றைப் பெரும்போகம், சிறு போகம் என அழைக்கிறோம். செப்ரெம் பர்-ஒக்ரோபர் தொடக்கம் பெப்ரவரி -மார்ச் வரையுள்ள காலம் பெரும்போகம் எனவும் ஏப்றில் - மே தொடக்கம் ஆகஸ்ட் - செப்ரெம்பர் வரையுள்ள காலம் சிறுபோ கம் எனவும் அழைக்கப்படுகிறது. பெரும் போகமே இலங்கையில் நெல் விளைவிப்ப தற்கு முக்கியமான காலமாகும். பயிர்ச் செய்கைக்குப் பண்படுத்தப்பட்டுள்ள நிலம் 14 இலட்சம் ஏக்கராகும். இதில் ஏறக்குறைய 80 சதவீதம், அதாவது 12 இலட்சம் ஏக்கர் நிலம் பெரும்போகத்தின்போது பயிரிடப் படுகிறது. சிறு போகத்தின்போது, பெரும் போகத்தில் பயிரிடப்படும் நிலப்பரப்பில் அரைவாசியே, அதாவது 6 இலட்சம் ஏக்கர் நிலமே பயிரிடப்படுகிறது.

புள்ளி விவரத்தின்படி பண்படுத்தப்பட்ட வயற்பரப்பும், அதன் விநியோகமும் பின் வருமாறு:

| | |
|---|---|
| ½ ஏக்கருக்குக் குறைவானது | 17% |
| ½ ஏக்கர் தொடக்கம் 1 ஏக்கர் வரை | 23% |
| 1 ஏக்கர் தொடக்கம் 2 ஏக்கர் வரை | 24% |
| 2 ஏக்கர் தொடக்கம் 5 ஏக்கர் வரை | 28% |
| 5 ஏக்கருக்கு மேல் | 8% |

1973 ஆம் ஆண்டில் சிறுபோகத்தில் 2 கோடியே 8 இலட்சம் புசல் நெல் விளைந் தது. அப்போது ஏக்கர் ஒன்றில் கிடைத்த சராசரி விளைச்சல் 42.9 புசல்களாகும். 1973-74 இன் பெரும்போகத்தில் 4 கோடி 70 இலட்சம் புசல் நெல் விளைந்திருப்பதாக வும், ஏக்கருக்கு 49 புசல் வீதம் கிடைத் திருப்பதாகவும் மேலெழுந்த வாரியாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வரண்ட வலயத்தினது விவசாயம் நீர்ப்பாசன வசதியுடன் தொடர்பு பட்டது. நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுள்ள பகுதிகளில் முக்கியமாக நெல் பயிரிடப் படுகிறது. வரண்ட வலயத்தில் சில மாதங் களில் மாத்திரம் மழை பெய்வதனால், எஞ்சிய காலத்தில், அதாவது சிறு போகத் தின்போது நீர்ப்பாசனம் கட்டாயம் தேவைப் படுகிறது. நீர்ப்பாசன வசதியுள்ள பகுதி களில் நெல் விசவாயத்துடன்; மிளகாய், வெங்காயம், நிலக்கடலை, தட்டைப்பயறு போன்ற பயிர்களும் வரண்ட வலயத்தின் சில பகுதிகளில் மழையை நம்பிய 'வானம் பார்த்த' விவசாயமும் நடைபெறுகிறது. நீர்ப் பாசன வசதியுள்ள பகுதிகளில் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், அவற்றில் நெற் செய்கைக்கு முதலிடமும் தரப்படுகிறது. சில குடியேற்றத்திட்டங்களுக் குச் சிறப்பான இடம் தரப்பட்டிருப்பதுடன் இவற்றில் விவசாயத்தை விருத்திசெய்தற் கான வசதிகளும் பெருக்கப்பட்டுள்ளன. குடியேற்றத்திட்டங்கள் முக்கிய குளங்களை அடுத்துள்ளன. பொலநறுவை, அனுராத புரம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் வரண்ட வலயத்தில் நெல் விவசாயத்துக் குப் பெயர் பெற்றவை. யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்கள் இரண்டும் மிள காய், வெங்காயம் போன்ற பயிர்களுக்குப் பெயர் பெற்றிருப்பதுடன் அங்கு இவை முறையாகவும் பயிரிடப்படுகின்றன.

வரண்ட வலயத்தில் நடைபெறும் விவ சாயத்தில் சேனைச் செய்கையும் முக்கிய பங்கினைப் பெறுகிறது. காட்டை வெட்டிக் கொழுத்தி, மழைகாலத்தில் பயிரிடுதலே சாதாரண சேனைச் செய்கை முறையாகும். மண்ணின் செழுமை குறைந்ததும் அவ் விடத்தில் புல், பூண்டு வளர விடப்பட்டு, வேறு இடத்தைத் தேடி அதில் சேனைப் பயிர் செய்யப்படுகிறது. மிளகாய், எள்ளு, கொடிப்பயறு, மரக்கறி வகைகள், பருத்தி, சோளம் முதலியன சேனைப்பயிர்களாகப் பயிரிடப்படுகின்றன. சேனைப்பயிர்ச் செய்கை முக்கியமாக அநுராதபுரம், அம்பாந் தோட்டை, மொனராகலை ஆகிய மாவட்டங் களில் நடைபெறுகிறது.

மழை வீழ்ச்சியை ஒட்டியதே பெரும் போகமும் சிறுபோகமும். பருவப்பெயர்ச் சிக் காற்றே எங்களுக்கு மழையைக் கொணர்கிறது என்பதனை அறிவோம். தென் மேற்குப் பருவப் பெயர்ச்சி மழைகாலம் 'சிறுபோகம்' எனவும், வட கிழக்குப் பருவப்பெயர்ச்சி மழைகாலம் 'பெரும்போ கம்' எனவும் அழைக்கப்படுகிறது.

வரண்ட வலயத்திற்குப் பெரும்போக காலம் மழைகாலம், சிறுபோக காலம் வரட்சிக் காலமாகும். இதனால் வரண்ட வலயத்திலே நீர்ப்பாசன வசதிகள் உள்ள பகுதிகளில் மாத்திரமே விவசாயம் செய்யப் படுகிறது. ஈரலிப்பு வலயத்திற்கு வருடம் முழுவதிலும் மழை வீழ்ச்சி உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டினது ஈரலிப்பு வலயத்தின் முக்கிய பயிர்கள் தேயிலை, றப்பர், தென்னை ஆகியனவாகும். ஏறக்குறைய ஆறு இலட்சம் ஏக்கர் நிலத்தில் தேயிலை நாட்டப்பட்டுள்ளது. இதில், ஐந்து இலட்சம் ஏக்கர் பெருந்தோட்டச் சொந்தக்காரர்களுக்கும், மிகுதி ஓர் இலட்சம் ஏக்கர் சிறிய தோட்டச் சொந்தக்காரர்களுக்கும் உடைமையாக உள்ளது. **1973** ஆம் ஆண்டில் மொத்தம் **46.6** கோடி இறாத்தல் தேயிலை உற்பத்தியாகியது. இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு நாணயத்தில் அறுபது சதவீதம் தேயிலையினாலேயே கிடைக்கிறது. ஏறத்தாழ எட்டு இலட்சம் தொழிலாளர் தேயிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தேயிலை வளரும் பகுதிகள் உயர்ந்த பிரதேசம், மத்திய பிரதேசம், தாழ்ந்த பிரதேசம் என மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன. நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை ஆகிய மாவட்டங்கள் தேயிலைக்குப் பிரசித்தமானவை.

**1973** ஆம் ஆண்டில் றப்பர் உற்பத்தி **35** கோடி இறாத்தலாக இருந்தது. இவ்வுற்பத்தி துரிதமாக அதிகரித்தும் வருகிறது. இந்நாட்டில், ஐந்து இலட்சத்து அறுபத்தேழாயிரம் ஏக்கர் நிலத்தில் றப்பர் நடப்பட்டுள்ளது. களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, காலி, கொழும்பு, கண்டி, மாத்தளை மாவட்டங்கள் றப்பருக்கு முக்கிய மாவட்டங்களாகும்.

இலங்கையில் தென்னை அதிகமாக வளரும் பிரதேசம் ஒரு முக்கோணத்தை ஒத்திருப்பதால், இது, 'தென்னை முக்கோணம்' என்று அழைக்கப்படுகிறது. கொழும்பு, சிலாபம், புத்தளம், குருநாகலை ஆகிய மாவட்டங்கள் இதனுள் அடங்குகின்றன. **1973** ஆம் ஆண்டில் விளைந்த தேங்காய்களின் எண்ணிக்கை ஏறக்குறைய **194** கோடிகளாகும். (இதற்கு முன்னைய வருடமான **1972** இல் விளைச்சல் **297** கோடி காய்களாக இருந்தன.) ஏறத்தாழ **12** இலட்சம் ஏக்கரில் தென்னை நடப்பட்டுள்ளது. இதில் மூன்றில் இரண்டு பாகம் அல்லது எட்டு இலட்சம் ஏக்கர், **20** அல்லது அதற்குக் குறைவான ஏக்கர் பரப்பினைக் கொண்டதாகும்.

தேயிலை, றப்பர், தென்னை போன்ற பிரதான வர்த்தகப் பயிர்களைத் தவிர மற்றும் சிறிய வர்த்தகப் பயிர்களும் இந்நாட்டில் விளைகின்றன. மிளகு, கராம்பு, ஏலக்காய், கறுவா, சாதிக்காய், கோப்பி, கொக்கோ ஆகியன இவற்றுட் சில. மிளகு, கராம்பு, சாதிக்காய் போன்றவை கேகாலை, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் கலப்புப் பயிராக நாட்டப்படுவதைக் காணலாம். தேயிலை வளர்ந்துள்ள இடங்களில் நூற்றாண்டுகளாக நன்கு வளர்ந்த கோப்பி இப்போது மத்திய பிரதேசத்தில், சிறப்பாக, கும்பறைப் பள்ளத்தாக்கிலே காணக்கூடியதாக உள்ளது. கறுவாவுக்குத் தென்பகுதியும் மேற்குப் பகுதியும் பிரசித்தி பெற்றவை.

இலங்கையின் மத்திய பிரதேசம் பொருளாதார ரீதியில் அவ்வளவு ஆதாயம் திரட்டும் பகுதியாக இல்லாதமையால், வேறு வகைப் பயிர்களையும் நாட்ட முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. 'மல்பெறி' அல்லது முசுக்கட்டைச் செடிகளை நாட்டி, பட்டுப் பூச்சிகளை வளர்க்க இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உயர்ந்த இனப் புற்களை வளர்க்கவும் அதன்மூலம் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கவும் உத்தேசிக்கப்படுகிறது

மரக்கறி வகைகளில் பெருமளவு நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, குருநாகலை ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. மலைப்பகுதிகளில் வளரும் மரக்கறிவகைகள் சமதரைப் பகுதிகளில் வளர்பவையில் இருந்தும் வேறுபட்டவை. யாழ்ப்பாணப் பகுதியிலும், சேனைப் பயிர் செய்யும் பகுதிகளிலும், நீர்ப்பாசன வசதியுள்ள பகுதிகள் சிலவற்றிலும், மிளகாய் செய்கை பண்ணப்படுகிறது. உருளைக்கிழங்கு, நுவரெலியா, பதுளை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் செய்கை பண்ணப்படுகிறது. அம்பாந்தோட்டையில் பருத்தி நன்கு பயிரிடப்படுகிறது. ஈரலிப்பு வலயத்தில் அன்னாசி, கொடித்தோடை, வாழை போன்ற பயிர்களும், வரண்ட வலயத்தில் எலுமிச்சை, மா ஆகிய பழ மரங்களும் சிறப்பாக வளர்கின்றன.

விவசாயத்தில் பயிர்ச் செய்கைக்குப் போன்றே மிருக வளர்ப்புக்கும் சிறப்பான இடமுண்டு. பொலநறுவை, போப்பத்தலாவை, அம்பேவெல, தென்னை வளரும் முக்கோணக் பகுதி ஆகிய இடங்களில் பாற் பசுக்கள் பெரிய எண்ணிக்கையில் வளர்க்கப்படுகின்றன. இவ்விடங்கள் அதிக பால் தரும் பசு இனங்கள் வளர்வதற்கு உகந்த பகுதிகள் எனக் கருதப்படுகின்றன.

முட்டைக்காகவும், இறைச்சிக்காகவும் கோழி வளர்த்தலும், இறைச்சிக்காகப் பன்றி வளர்த்தல் முதலியனவும் மிருக வளர்ப்புத் திட்டத்தில் அடங்குகின்றன.

இலங்கையின் நில, சுவாத்தியத் தன்மைகளையும், அவற்றிற்கு இசைய நடைபெறும் விவசாய முயற்சிகளையும் சுருக்கமாக இக் கட்டுரை விளக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசாமியும் சின்னச்சாமியும்

**[கடைத் தெருவிலே இரு கமக்காரர்கள் சந்திக்கிருர்கள். ஆனல் அவர்களது கருத்தோ கமத்தையே சுற்றுகிறது. இதனை இங்குள்ள உரையாடலில் காண்கிறேம்.]**

(நேரம் காலை 10 மணி. கந்தசாமி அவர்கள் தோளில் துண்டுடன் மாதகல் பஸ்ஸிலிருந்து யாழ்ப்பாணத்தில் வந்து இறங்குகின்ருர். அப்போது ராணிதியேட்டருக்கு அருகிலிருக்கும் தேநீர்க் கடையிலிருந்து சின்னச்சாமி, தனது முழுக்காற்சட்டையைத் தட்டிவிட்டுக் கொண்டே கந்தசாமியை நோக்கி வருகின்ருர். கந்தசாமி அவர்கள் பரந்தனில் சொந்தக் கமஞ் செய்பவர். சின்னச்சாமி கூட்டுப் பண்ணையொன்றில் கமஞ்செய்யும், எஸ். எஸ். சி.படித்த 22 வயது வாலிபர்.)

**கந்:** எப்ப தம்பி பண்ணையிலிருந்து வந்தநீர்?

**சின்:** நான் போன கிழமை வந்தனன். இன்டைக்குத் திரும்பிப் போகணும். அதுக்குமுதல் ஒரு படம் பார்க்கலாமென்று வந்தேன். நீங்கள் துலையாலயோ?

**கந்:** நானும் கமத்தாலே நேற்றுத்தான் வந்தனன். பெரிய கடையிலே ஒரு ஆளைச் சந்திச்சிட்டுப் போகவந்தனன். எப்படி தம்பி உங்கடை பண்ணை வேலையெல்லாம் போகுது?

**சின்:** பிழையில்லை அண்ணை. மிளகாய்க் கன்றெல்லாம் பிஞ்சுபிடித்திருக்கு. இப்ப கண்டுகாலிகளுக்கு மருந்தடிக்கும் வேலை நடக்குது. எப்படி உங்கடை வயல் விளைச்சலெல்லாம்- இம்முறை நல்ல விளைச்சலென்று கேள்வி.

**கந்:** அதையேன் தம்பி கேட்கிருய்- விளைச்சலென்ருல் பரவாயில்லைத்தான். ஆனல் விதைப்பு நேரம் கடன் கிடைக்காததால் - அதுதான் அந்தச் சங்கக் கடன் மணிசியின்ரை நகைநட்டுக்களை அடகு வைத்துக் காசு கடன் எடுத்தேன். இப்ப வட்டியும் முதலுமாக அதை மீளத்தான் சரியாயிருக்கு. பாடுபட்டு உழைத்து அநியாய வட்டிக்கு அழ வேண்டியிருக்கு. இந்தச் சங்கக்கடைக் காரர்கள் வேளைக்குக்கடன் கொடுத்தால் ஏன் இந்தப்பாடு?

**சின்:** இதுதான் அண்ணை சொல்றது, கிராமிய நிறுவனங்களில் — நடவடிக்கைகளில் பங்கெடுக்கவேணும் என்று. இப்ப பாருங்க எங்கடை பண்ணையிலே அடிக்கடி கமத்தொழில் சம்பந்தமாகப் பயிற்சி வகுப்புக்கள் வைக்கிருர்கள்.

**கந்:** என்ன பயிற்சி வகுப்புக்கள்?

**சின்:** உரம் பாவிக்கிற முறை, கன்றுகள் நடும் புதுமுறைகள், கடன் எடுக்கிற முறை, கழிவு விலையில் உரம் எடுக்கிற முறை - எல்லாவற்றையும் பற்றித்தான்.

**கந்:** அது சரி, அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?

**சின்:** இவ்வளவு காலமும் எல்லாப் பிழையும் சங்கக்கடைக்காரர்களில்தான் என்று எண்ணியிருந்தது எவ்வளவு பிழையென்று அந்தப் பயிற்சி வகுப்பிற்குப் போனபிறகு தானே எனக்கு விளங்கியது. யாரைப்பார்த்தாலும் சங்கக் கடையில்வேளைக்கு கடன் தாரங்களில்லை, உரம் தாராங்களில்லை என்ற பேச்சுத்தான். ஆனல் இதுக்கு என்ன காரணம் என்று யோசிக்கிறதில்லை, எல்லாப் பிழையும் சங்கக்கடையிலேயேயும் அரசாங்கத்திலேயும் போடுறது இப்ப பழகிவிட்டது.

**கந்:** என்ன தம்பி கனக்க சொல்கிருய்? அப்ப சங்கக்கடையில் பிழையில்லையென்ருல் எங்களிலேயோ பிழை? ஓம் என்று சொல்லுவாய் போல் இருக்கு.

**சின்:** அண்ணை உண்மையிலே பிழை சங்கக்கடையிலே கால்வாசி என்ருல் எங்களிலை முக்கால்வாசி இருக்கு.

**கந்:** தம்பி விஷயத்தை கொஞ்சம் விளங்கச் சொல்லேன்—நானும் அறிய.

**சின்:** அண்ணை இப்ப பாருங்கோ இந்தக் கடன் எடுக்கிற அலுவல் இருக்கே. இது சுணங்கிறதுக்கு இரண்டு காரணம் இருக்கு. ஒன்று என்னவென்ருல், கமக்காரர்கள் கடைசிவரையும் இருந்துவிட்டு சுடுகிது மடியைப் பிடி என்று கடைசி நேரத்தில் கடனுக்கு விண்ணப்பிக்கிறதுதான். எல்லாரும் நினைக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி சங்கக்கடைக்கு விண்ணப்பம் கிடைத்ததும் கடன் கொடுக்க முடியாது. அதற்கான பணமும் சங்கக்கடையில் இல்லை. சங்கக் கடை ஒவ்வொரு பிரதேசத்திற்கும் இருக்கும் தாய்ச் சங்கத்திற்கு அந்த விண்ணப்பத்தை அனுப்பவேணும். அதைத் தாய்ச் சங்கம் மக்கள் வங்கிக்கு அனுப்பி, அதன் அனுமதியைப்பெற்று அவர்களிடமிருந்து பணத்தை எடுத்துச் சங்கக்கடைக்குக் கொடுக்கும். அதை வாங்கித்தான் சங்கக்கடை உங்களுக்கு கடன் தரவேணும். எனவே நாங்கள் நேரகாலத்திற்கு விண்ணப்பத்தைச் சங்கக்கடைக்குக் கொடுத்தால் தானே இந்த நடவடிக்கைகளெல்லாம் செய்து உங்களுக்கு அவர்கள் கடன் தருவார்கள். நாங்கள் நேரம் சென்று விண்ணப்பித்துவிட்டு, என் கெதியில் கடன் தரவில்லையென்று எப்படி அவர்களைக் குற்றம் சாட்ட முடியும்?

**கந்:** ஓம், ஓம், அப்படிச் சொல்ல ஏலாது தான்.

**சின்:** கமக்காரர்கள் செய்யிற அடுத்த பிழை தாங்கள் எடுக்கிற கடனை நேரகாலத்திற்கு ஒழுங்காகத் திருப்பிக் கொடுப்பதில்லை. நீங்கள் உங்கள் நகை நட்டுகளை அடகு மீட்பதில் காட்டும் அக்கறையை உங்கடை சங்கக் கடனைத் தீர்க்கக் காட்டுவீர்களோ- இல்லை. சங்கக் கடையில் கடன் எடுத்தால் அது உங்களுக்கு கடன் எடுத்த மாதிரியே தெரியவில்லை. அதை நேரத்திற்கு கொடுக்கவேண்டும் - அடுத்தமுறையும் கடன் எடுக்கவேண்டுமென்று நினைப்பதில்லை. உங்களை மட்டும் சொல்லவில்லை. அண்ணை, பொதுவாக என்னையும் சேர்த்து எல்லாக் கமக்காரர்களையும் தான் சொல்கின்றேன்.

**கந்:** சிலவேளை கமம் அழிந்து போன காரணத்தால் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் போய்விடுகிறதே தம்பி.

**சின்:** அதையென்றால் ஒத்துக்கொள்ளலாம். ஆனால் கன ஆக்கள் வாங்கிய கடனைத்திருப்பி லேசிலை கொடுப்பதில்லை. அதாலே அவைக்கும் இடஞ்சல், மற்றக்கமக்காரர்களுக்கும் கடன் எடுக்கக் கஷ்டம். இப்படிச் செய்துவிட்டு, எப்படித் திருப்பிக் கடன் கேட்பது? விவசாயத்திற்குக் கடன் கொடுக்கும் வங்கிகள் தங்கடை மூலதனத்திலிருந்துதான் எங்களுக்கு கடன் தருகின்றன. அதை நேரத்திற்கு திருப்பிக் கொடுக்காவிட்டால் அடுத்த முறையும், திருப்பித் திருப்பிக்கடன் கொடுக்க ஏலாமல் போகுதாம்.

**கந்:** தம்பி சொல்லிறதிலும் ஞாயம் இருக்குதான். தம்பி சிலநேரம் சிலபேர் என்னவோ உற்பத்தி வளக்குழுவோ எங்கேயோ போய் நேரடியாகவும்கடன் எடுக்கிறார்களாம். அது எப்படி என்று தெரியுமோ?

**சின்:** அது பாருங்கோ கடன் எடுக்கிறதில் இருக்கிற தடங்கலை குறைக்க இலங்கை வங்கி நேரடியாக அதன் கிளைகளை ஒவ்வொரு உற்பத்தி வளக்குழுவிலும் நிறுவி இருக்கு. இந்தக்கிளையிலும் இலேசாக கடன் எடுக்கலாம்.

**கந்:** அப்படியா? அவ்வளவு லேசா?

**சின்:** ஆனால் அதற்கு நீங்கள் ஒரு விவசாயியென அடையாள அட்டையொன்றைப் பெறவேண்டும். இது உங்கடை காசிலே 5 ரூபா செலவளித்து எடுக்க வேண்டும். 5 ரூபா செலவளித்தாலும் அதில் ஒன்றும் நட்டமில்லை. இதை வைத்துக்கொண்டு நேரடியாக வங்கிக் கிளையிலேயே போய் விவசாயக் கடனை எடுக்க ஏலும். இதாலே நீங்க சங்கக் கடைக்கு அலையத் தேவையில்லை.

**கந்:** தம்பி நீர் சொல்லவிட்டுத்தான் நானும் யோசித்துப் பார்க்கிறன். நீர் சொல்றது உண்மைதான். நாங்கள் கொஞ்சம் பொறுப்பாக நடந்தால்தான் ஒழுங்காக எங்களுக்குக் கடன் கிடைக்கும் என்ன- உமக்குக் கன விஷயங்கள் எல்லாம் தெரிகிறது.

**சின்:** அதுதான் அண்ணை சொல்லுறது, கூடிய மட்டும் கிராமிய நிறுவனங்களாகிய, விவ்சாய உற்பத்திவளக்குழு, பயிர்ச்செய்கைக்குழு, விவசாய விஸ்தரிப்பு நிலையங்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொள்ளவேண்டுமென்று. அங்கு இதைப்பற்றியெல்லாம் அடிக்கடி அறிவிப்பார்கள்.

**கந்:** சரி, தம்பி, நானும் இனி இப்படியான நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளத்தான் வேண்டும். உம்மைச் சந்தித்ததும் நல்லதுதான். இல்லாவிட்டால் நானும் எங்களிலை ஒரு பிழையுமில்லை. எல்லாப் பிழையும் சங்கக் கடையிலேதான் என்று நினைத்திருப்பேன்.

**சின்:** அண்ணை படத்திற்கு டிக்கட் கொடுக்கிறார்கள். நான் போயிட்டு வரவா?

**கந்:** சரி தம்பி வாரும். பிறகு சந்திப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயிகளுக்குள்ள பிரச்சினைகள்பற்றி

# விசாரித்து அறிந்தவை

'கமநலம்' சஞ்சிகையின் முன்னைய இரண்டு இதழ்களிலும் கமக்காரர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் கஷ்டங்கள் சிலவற்றை 'கமமும் நாமும்' என்ற தலைப்பின்கீழ் வெளியிட்டிருந்தோம். இவற்றைப்பற்றி உரிய இடங்களில் விசாரித்தபோது எமக்குக் கிடைத்த பதில்களைக் கீழே தருகிறோம்.

### மண்வெட்டித் தட்டுப்பாடு

மண்வெட்டி கிடைப்பதில் உள்ள கஷ்டத்தைப்பற்றிப் பல கமக்காரர்கள் முறையிட்டார்கள். இதைப்பற்றி அரசாங்க உலோகப் பொருட் கூட்டுத்தாபனத்துக்கு எடுத்துச் சொன்னோம். மண்வெட்டித் தட்டுப்பாடு என்னும்போது மக்கள் சாதாரணமாக 'முதலை' மார்க் மண்வெட்டிக்குள்ள தட்டுப்பாட்டையே குறிப்பிடுகிறார்கள் என்று மேற்படி நிறுவனத்தின் விற்பனை முகாமையாளர் குறிப்பிட்டார். 'முதலை' மார்க் மண்வெட்டித் தட்டுப்பாட்டை நீக்க ஐம்பதினாயிரம் மண்வெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டு, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டதாம். இப்போது 8'' X 10'' மண்வெட்டிகள் முப்பத்தையாயிரமும், 7''X10'' மண்வெட்டிகள் ஐயாயிரமும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வளவு மண்வெட்டிகளும் இப்போதைய பாவிப்புக்குப் போதுமானதென அக்கூட்டுத்தாபனம் கருதுகிறது. அநேகமாக கமக்காரர்கள் 9'' X 9'', 10 X 10'' ஆகிய அளவுகளில் உள்ள மண்வெட்டிகளைப் பாவித்துப் பழகியிருப்பதால், விரைவில் அப்படியான மண்வெட்டிகளையும் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பசளை அள்ளுதற்கு அல்லது சேற்றில் வேலை செய்தற்குப் பயன்படும் அகலமான மண்வெட்டிகளைக் கிராமங்களில் கொல்லர்களே செய்து வழங்குகின்றனர்.

### கூட்டுறவுச் சங்கங்களில் நிலவும் குறைபாடுகள்

கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றில் விவசாயிகளுக்குக் கிடைக்கும் சேவைகள் பல சந்தர்ப்பங்களில் விரும்பத்தக்கதாக இல்லை என எங்களுக்கு முறைப்பாடு செய்தார்கள். வேறு சில கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையில் பணிபுரிவதாகவும் கேள்விப்பட்டோம். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் இவற்றையிட்டு விசாரித்தோம். இலங்கையில் அநேகமாக ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கூட்டுறவுச் சங்கத்திற்குமான இயக்குநர் குழுவில் அக்கிராமத்துப் பிரமுகர்களே உறுப்பினராக இருக்கிறார்கள். இந்த இயக்குநர் குழுவே சங்கத்தை நடத்துவதும், அதற்கு ஊழியர்களை நியமிப்பதும். எனவே சங்க அலுவல்கள் நன்கு நடைபெறச் செய்யும் பொறுப்பு இயக்குநர் குழுவுடையது.

கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள குறைபாடுகளைப்பற்றி இயக்குநர் குழுவுக்கு முறையிட நுகர்வாளரான மக்களுக்கு உரிமையுண்டு.

### நெல் கொள்வனவு

நெற்சந்தைப்படுத்தும் சபையின் சார்பில் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளிடமிருந்து நெல் வாங்கும்போது சாக்குகளுக்காகக் கழிக்கப்படும் நிறை இடத்துக்கிடம் வேறுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த வித்தியாசம் $2\frac{1}{2}$ றுத்தலிலிருந்து 5 றுத்தல் வரைஇருந்தது. இதையிட்டு நாங்கள் நெற்சந்தைப்படுத்தும் சபையிடம் விசாரித்தோம். நெற்சந்தைப்படுத்தும் சபை சாக்குக்கெனக் கழிக்கப்பட வேண்டிய நிறை என்னவாக இருக்க வேண்டும் என விதித்துள்ளது. அதன்படி 110 றுத்தல் நெல் கொள்ளக்கூடிய சாக்குக்காக 2 றுத்தலும், 140 றுத்தல் கொள்ளும் சாக்குக்காக 3 றுத்தலும் கழிக்கப்படலாம். இதற்குமேல் கழிப்பதற்கு நெல்லை வாங்கும் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுமதியில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏர் முனையில்....

**முருங்கன் திரு. பி. பி. அந்தோனிப்பிள்ளை எழுதுகிறார்:-**

தற்செயலாக '**கமநலம்**' சஞ்சிகையின் முதலாவது (தை, 1974) இதழை வாசிக்க நேர்ந்தபோது, அது மலர்ந்துள்ள நோக்கத்தைத் தெரிந்துகொண்டேன். '**கமநலம்**' சஞ்சிகை எதற்காக? என்ற கட்டுரை என் போன்றோருக்கு - கிராமிய நிறுவனங்களில் காணப்படும் பல குறைபாடுகளை எடுத்துக் காட்டத் துடித்தவர்களுக்கு - நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது.

சிறுபோக வேளாண்மைக்குப் 'புலவு' எனப்படும் காணிகளைப் பிரித்துக்கொடுப்பதில் பல ஊழல்களும் குறைபாடுகளும் உள்ளன. மன்னார்ப்பிரதேசத்தில் வழமையாக நடைபெறும் விடயத்தையே குறிப்பிடுகின்றேன். அரசாங்க அதிகாரிகள் ஊழல்களைக் கண்டுபிடித்து அவற்றைத்தடுக்கும் நோக்கத்தோடு விசாரணை செய்தால் மட்டுமே, தவறுகளைச் சுட்டிக்காட்டப் பொது மக்கள் முன்வருவர்.

ஒவ்வொரு குளத்தையும் சார்ந்த காணிகளின் உண்மையான அளவுகள் வெளியிடப்பட்டு, அவை விவசாயிகளுக்கே பிரித்துக் கொடுக்கப்படவேண்டும். வேலி பயிரை மேய அனுமதிக்கக்கூடாது. அப்போது தான் விவசாயிகள் சிறுபோகத்திலே பயிரிடும் நில விஸ்தீரணம் அதிகரிக்கும். வயலில் களை எடுத்தால் மாத்திரம் போதாது. கிராமிய நிறுவனங்களில் நிலவும் ஊழல்களையும் களைந்தாக வேண்டும்.

**யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு மண்டோரஸ் ஆறுமுகம் சொல்லுகிறார்:**

நான் படித்துவிட்டு முந்திரிகைச்செடி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள வாலிபன். எனக்கு இம்முந்திரிகைச் செடி வளர்ப்பில் போதுமான வருவாய் கிடைக்கின்றது. நான் 'கமநலம்' சஞ்சிகையின் 1 ஆம் 2 ஆம் இதழ்களை வாசித்தேன். இவ்வளவு காலமும் எமக்கு இப்படிப்பட்ட இலகுவான நடையில் கமக்காரர்களுக்கு எளிதில் விளங்கக் கூடிய சஞ்சிகையொன்று இல்லையென்ற குறையை 'கமநலம்' நீக்கிவிட்டது. என்னைப் போன்ற வாலிப கமக்காரர்களுக்கு இந்த சஞ்சிகை பெரும் உதவியாக இருக்கிறது. கமக்காரர்களின் வாழ்க்கையில் ஏற்படும் கரைச்சல்கள், இலாப நஷ்டங்கள் போன்ற சகல விடயங்களையும் இச்சஞ்சிகையில் வாசித்து அறிந்தேன். இதுபோல் இன்னும் பல அம்சங்களையும் சேர்த்து இனி வரும் இதழ்களில் பிரசுரிப்பீர்களானால் மிகவும் சுவையாக இருக்கும். இதில் முந்திரிகை வளர்ப்பு போன்ற விடயங்களையும் பிரசுரித்தால் நன்றாக இருக்கும் என நம்புகின்றேன். '**கமநலத்தை**' நீங்கள் பிரசுரித்தாலும் அது எங்கள் சஞ்சிகையே. வளர்க '**கமநலம்**'.

## கிராமிய வங்கிகள்

**இதுவரையில் நாட்டின் பல பாகங்களிலும் 352 கிராமிய வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசி பட்டினியிலிருந்து

நாட்டு மக்களைப் பாதுகாக்க
முன்வந்திருக்கும்

விவசாயப் பெருமக்களுக்கு

*உதவியளிக்க முன்வந்துள்ளது....*

**இலங்கை வங்கி**

அரசாங்கத்தினுல் அமைக்கப்பட்டு வரும் 438 கமத்தொழில் சேவை நிலையங்களில் இலங்கை வங்கி தனது கிளைகளை நிறுவி, அதன் மூலம் கமத்தொழிலை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு நேரடியாக உதவியும் சேவையும் அளிக்கிறது.

# இலங்கை வங்கி

கூடுதலான கிளையுடன் கூடிய,
இலங்கையின் மிகப் பெரிய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உரம்

இ. உ. யா. இன் கலவை செய்யும்
இயந்திரத்திலிருந்து பெறப்படுகின்ற
மிகச் சிறந்த உரம்

## இலங்கையில் மிக நவீனமானது

- நெல்
- தென்னை
- தேயிலை, இறப்பர்
- ஏனைய பயிர்கள்
- வீட்டுத் தோட்டம்

கலவையிலே இதன் தரம் தங்கியுள்ளது

# இலங்கை உரயாக்கம்

த. பெ. இல. 21
35, டபிள்யூ. ஏ. டி. இராமநாயக்க மாவத்தை,
கொழும்பு — 2.

தொலைபேசி : 35823


கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தினல் 29, ஜயந்தவீரசேகர மாவத்தை, கொழும்பு 10-இல் உள்ள குணரத்ன அன் கம்பெனியில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org